வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

21.01.2021 வியாழக்கிழமை






07

மாகாண தேர்தலை நடத்த தயார்



08

அமெரிக்க வாழ் இந்தியர்கள் மீது குவியும் கவனம்!



12

சீனாவில் மிதக்கும் ரயில் அறிமுகம்



13

முதலிடத்தில் இந்திய அணி!

# தமிழர் மீது அடக்குமுறையை கையாளவே முயல்கிறது அரசு

## கஜேந்திரகுமார் நேற்று சபையில் காட்டம்



கொழும்பு,ஜன.21

முப்பது ஆண்டுகால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்காது அவர்களை வறுமைக்கோட்டின் கீழ் வைத்திருக்கவும், அடக்குமுறையைக் கையாளவுமே முயற்சிக்கிறது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

02

## வடக்கில் 19 நாட்களில் 351 பேருக்கு தொற்று!

### வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்



யாழ்ப்பாணம், ஜன. 21

வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நேற்று முன் தினம் வரையான காலப் பகுதியில் 351 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள தாக வடக்கு மாகாண

02

## மன்னாரில் நேற்று 18 பேருக்கு தொற்று

மன்னார், ஜன. 21

மன்னார் மாவட்டத்தில் 18 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று புதன் கிழமை உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. அவர்களில் மன்னார் வைத்தியசாலையைச் சேர்ந்த 2 தாதியர்களும் 2 ஊழியர்களும் அடங்குகின்றனர் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், மன்னார் பொது வைத்தியசாலையில்

02

## அமெரிக்க அதிபரானார் ஜோ பைடன்

### கமலா ஹாரிஸ் முதல் பெண் துணை அதிபர்





வொஷிங்டன், ஜன. 21

அமெரிக்காவின் முதல் பெண், ஆசிய வம்சாவளி, ஆபி ரிக்க வம்சாவளி துணை அதிப ராக நேற்றிரவு பதவியேற்றார் கமலா ஹாரிஸ்.

கமலா ஹாரிசுக்கு முதல் இலத்தீன் உயர் நீதிமன்ற நீதிபதியான

02

## புத்தரின் போதனைக்கு மாறாகவே செயல்பட்டு வருகிறது அரசாங்கம்

### முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.21

கொரோனா வைரஸ் தொற் றால் மரணிப்பவர்களை அடக் கம் செய்வது தொடர்பில் அர சாங்கம் புத்தரின் போதனை யின் பிரகாரம் செயல்படுவது மில்லை விஞ்ஞான ரீதியிலான தீர்மானத்துக்கும் அனு மதிப்பதில்லை. அத்து டன் மரணிப்பவர்களை

02

## மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்க முடியாது

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன.21

கொரோனா வைரஸ் தொற் றால் மாணவர்களின் எதிர்கா லத்தை கேள்விக்குறியாக்க இட மளிக்க முடியாது என்றும் அடிப் படை வசதிகளற்ற பாடசாலை கள் தொடர்பில் விசேட கவ னம் செலுத்தப்பட்டுள்ளது என வும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹோமாகம - மஹிந்த ராஜ பக்ஷ கல்லூரியின் 10ஆவது வருட நிறைவு விழா நிகழ்வில் நேற்று

02

## கொரோனா தொற்றால் மேலும் ஒருவர் மரணம்

கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் ஒருவர் உயிரிழந்தார் என சுகாதார அமைச்சு அறிவித்துள் ளது.

02

## சுகாதார அமைச்சிலும் 10 பேருக்கு கொரோனா

### வைத்தியர் ஹேமந்த ஹேரத் தகவல்



கொழும்பு, ஜன.21

சுகாதார அமைச்சின் 4 பிரிவுகளில் 10 கொரோனா வைரஸ் தொற்றாளர் கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ள னர் என சுகாதார சேவைகள் பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

02

## ஜெனிவாவுக்கான கூட்டு ஆவணத்தில் ஒப்பமிட்டவரை விசாரித்தது பொலிஸ்

மட்டக்களப்பு, ஜன. 21

புலிகளை மீள உருவாக்க முயற்சிக்கிறீர்களா? என கேட்டு மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் தலைவர் சிவயோக நாதனிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

நேற்று முன் தினம் காலை மட்டக்களப்பில் உள்ள அவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பொலிஸார் சிவில் சமூக அமைப்புகளின் தலைவர் சிவயோகநாதனை விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளனர். ஆனால் அவர் வீட்டில் இல்லாத காரணத்தால் அவரை தொலைபேசியில் அழைத்து

02



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## தமிழர் மீது...

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

குருந்தூர் மலை பிரதேச இடத்தை தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது. எனினும் 1933 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இது தமிழர் பகுதி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக தமிழர்கள் இந்த இடத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

யுத்த காலகட்டத்தில் கூட தமிழர்கள் அங்கு சென்று வழிபட்டுள்ளனர். தைப் பொங்கல் நாள்களிலும் செல்வது வழக்கம். எனினும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியை இராணுவம் சுற்றிவளைத்து ஆக்கிரமித்துள்ளது.

இதனால் தைப்பொங்கல் தினத்தில் எமது தமிழர்கள் அங்கு செல்ல முடியாத நிலைமை உருவாகியது. கேட்டால் தொல்பொருள் திணைக்களம் இந்த இடத்தில் ஆய்வுகளை செய்வதாக கூறியுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் இந்த இடத்தில் பௌத்த தேரர் ஒருவர் புத்தர் சிலை ஒன்றை வைத்து பௌத்த விகாரையை அமைக்க முயற்சித்தார். பின்னர் நீதிமன்றம் இதற்கு இடைக்காலத் தடை விதித்து அவர்களின் நடவடிக்கைகளை தடுத்தது.

எனினும் மீண்டும் அதே இடத்தில் தொல்பொருள் திணைக்களத்தினர் ஆய்வுகளை மேற்கொள்வதாகக் கூறி விகாரை ஒன்றை அமைக்கும் முயற்சிகளை எடுத்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் இன்னமும் பொருளாதார நிலைமையில் வறுமைக் கோட்டின் கீழ் நிலையிலேயே வாழ்கின்றனர். ஏனைய மாவட்டங்களில் உள்ள மக்களுடன் போட்டிபோடக்கூடிய நிலைமையில் வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கைத்தரம் இல்லை.

எனவே எமது மக்களை இலக்கு வைத்து நடத்தும் அடக்குமுறையை நிறுத்த வேண்டும்- என்றார். (அ-எ)

## மாணவர்களின்...

காணொலிக் காட்சி மூலம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலவச கல்வி சேவையை மேம்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

நாட்டில் உள்ள பாடசாலைகள் அனைத்தையும் தரமுயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கம். தற்போது கல்வித் துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

மேலும் பாடசாலைகளில் சுகாதார பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களைப் பாதுகாப்பான முறையில் பாடசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு- என்றார். (அ-எ)

## மன்னாரில் நேற்று...

சேர்க்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்ட 3 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிகாட்டினார்.

மேலும் கொரோனா தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தனர் என்ற அடிப்படையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 11 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலை மருத்துவ விடுதியில் கொவிட் -19 நோயாளிகள் இருவர் கடந்த வாரம் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்த விடுதியில் பணியாற்றிய மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நோயாளிகள் என சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியமை கண்டறிப்பட்டது.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையின் அடிப்படையில் தாதிய உத்தியோகத்தர்கள் இருவரும் சுகாதார ஊழியர்கள் இருவரும் என நால்வர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் நால்வருக்கும் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தபட்டுள்ளது.

## சுகாதார...

மேலும் சுகாதார அமைச்சில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவது இது முதல் சந்தர்ப்பம் அல்ல என்றும், இதற்கு முன்னரும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட போதிலும் அதனை முறையாக முகாமைத்துவம் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பிரிவுகள் கிருமி நீக்கப்பட்டுள்ளன. அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பிரிவு மாத்திரம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள போதிலும், ஏனையவை வழமை போன்று இயங்குகின்றன- என்றார். (அ-எ)

## வடக்கில் 19...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நேற்று முன்தினம் வரை 351 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் வவுனியா மாவட்டத்தில் 234 பேருக்கும், மன்னாரில் 70 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 32 பேருக்கும் கிளிநொச்சியில் பத்துப் பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எங்களுக்கு கடந்த வாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கொரோனா தொற்று அபாயம் கூடிய பகுதியில் இருந்து அபாயம் குறைந்த பகுதிக்கு வருகை தருவோரை தமது அனுமதியின்றி தனிமைப்படுத்த வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் அங்கிருந்து வருபவர்களை தற்போது நாங்கள் தனிமைப்படுத்துவதில்லை. அப்படி கட்டாயமாக தனிமைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று தனிமைப்படுத்தும் நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்வோம்.

அத்தோடு, தற்போது நாடு முழுவதும் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு வருவதற்காக பல கட்டுப்பாடுகளுடன் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலைகள், சினிமா திரையரங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கு மாகாணத்திலுள்ள சந்தைகளை மீளவும் பழைய இடங்களில் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், திருமண மண்டபங்களில் ஆகக்கூடியது 150 பேருடன் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றோம். மேலும் ரயில் சேவைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இப்படியான ஒரு சூழ்நிலையில், கொரோனா தொற்று அபாயம் அதிகமாக இருக்கும் பகுதிகளில் இருந்து வருபவர்களை தனிமைப்படுத்த வேண்டாம் எனும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது - என்றார். (அ-03)

## அமெரிக்க...

சோனியா சோடோமாயர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் 46ஆவது அதிபராக ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடன் பதவியேற்றார்.

அதிபர் ஜோ பைடனுக்கு பாரம்பரிய வழக்கப்படி உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜான் ரொபர்ட்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

வொஷிங்டனில் உள்ள பாராளுமன்ற வளாகமாக கேப்பிட்டல் வளாகத்தில் இந்த பதவியேற்பு நிகழ்வு நடந்தது.

இரு வாரங்களுக்கு முன்னர் டிரம்ப் ஆதரவாளர்களால் இங்குதான் வன்முறை நடத்தப்பட்டது.

வழக்கமாக புதிய அதிபரை முன் வாசல் வழியாக பதவியை இழக்கும் அதிபர் வரவேற்பார். ஆனால், இந் நிகழ்வில் டொனால்ட் ட்ரம்ப் கலந்து கொள்ளவில்லை.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் காரணமாக முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பல்லாயிரக்கணக்கான பாதுகாப்புப்படை வீரர்கள் களமிறக்கப்பட்டு வொஷிங்டன் முழுவதும் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சமூக இடைவெளி விதிமுறைகளும் அமுலில் இருந்தன.

பதவியேற்பு விழாவை நேரடியாக பார்க்க அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமெரிக்க அதிபர்கள் பராக் ஒபாமா, பில் கிளின்டன், மற்றும் ஜோர்ஜ் டபுள்யூ புஷ் ஆகியோர் பைடனின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

“இது அமெரிக்காவின் நாள். ஜனநாயகத்தின் நாள். வரலாறு மற்றும் நம்பிக்கைக்கான நாள்” என்று அதிபராக பதவியேற்றுள்ள ஜோ பைடன், பதவியேற்ற பின்பான தன் முதல் உரையில் தெரிவித்தார்.

“பல சோதனைகளை சந்தித்துள்ள அமெரிக்கா, சவால்களில் இருந்து மீண்டுள்ளது. இன்று என் வெற்றியை அல்ல, ஜனநாயகத்தை கொண்டாடுவோம்” என்று அவர் கூறினார்.

“ஜனநாயம் எவ்வளவு விலைமதிப்பானது என்று நாம் மீண்டும் கற்றுக் கொண்டுள்ளோம். ஜனநாயகம் சற்று பலவீனமானது, ஆனால். இன்று ஜனநாயகம் வென்றிருக்கிறது” என்று அவர் தெரிவித்தார்.

“சில நாட்களுக்கு முன்பு இந்த இடத்தில் (கேப்பிட்டல்) வன்முறை வெடித்தது. ஆனால், இங்கு நாம் ஒரே நாடாக, கடவுளுக்கு கீழ் ஒன்றிணைந்து இருக்கிறோம். கடந்த இரண்டு தசாப்தங்களாக எப்படி நடந்ததோ அப்படி இன்றும் அமைதியான முறையில் இந்த பதவியேற்பு விழா நடைபெறுகிறது.”

அதிபராக பதவியேற்ற பின் பேசிய முதல் உரையில், பெண் துணை அதிபரான கமலா ஹாரிஸ் குறித்தும் அதிபர் ஜோ பைடன் குறிப்பிட்டார்.

”180 ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் வாக்களிக்கும் உரிமை கேட்டு பேரணி நடத்தியபோது, ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் அவர்களை தடுத்தனர். ஆனால், இன்று அமெரிக்க வரலாற்றில் முதல் பெண் துணை அதிபராக இங்கு கமலா ஹாரிஸ் பதவியேற்றுள்ளார். எதுவும் மாறாது என்று கிடையாது” என்று அவர் தெரிவித்தார்.

எனக்கு வாக்களிக்காதவர்களையும் நான் பாதுகாப்பேன் என உறுதி கூறுகிறேன் என்று அவர் பேசினார்.

## கொரோனா...

இதனையடுத்து கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 274 ஆக உயர்ந் துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் 53 வயது பெண் என்று சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. (எ)

## ஜெனிவாவுக்கான...

அவரது அலுவலகத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசுசார்பற்ற நிறுவனங்களின் அலுவலகமான இணையத்துக்கு சென்று சிவயோகநாதனை விசாரணை செய்த பொலிஸார் “நீங்கள் புலிகளை மீள உருவாக்க முயற்சிக்கிறீர்களா? புலிகளுக்கு உதவி செய்கிறீர்களா? எனக் கேள்வி எழுப்பி உள்ளனர்.

அத்துடன் அவரது நிறுவனத்தில் உள்ள அங்கத்தவர்களின் பெயர் விவரங்கள், அங்கத்துவம் வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பெயர் விவரங்களை கோரியுள்ளனர். அதனைத் தரமுடியாது எனக் கூறியபோது அனைவரையும் கொழும்புக்கு அழைத்து விசாரணை செய்யவேண்டி வரும் என அச்சுறுத்தி உள்ளனர்.

அதன் பின்னர் இணையத்தில் உள்ள அங்கத்தவர்களின் பெயர் விவரங்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டம் சார்ந்த மக்கள் பிரச்னைகளில் முன்நின்று குரல் கொடுத்து வரும் சிவயோகநாதன் அண்மையில் இலங்கை அரசுக்கு எதிராக தயாரிக்கப்பட்ட ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கான ஆவணத்தில் மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்புக்கள் சார்பாக கலந்து கொண்டு கையொப்பம் இட்டவர் என்பதுடன், மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் மேற்கொள்ளப்படும் அத்து மீறிய சிங்கள விவசாயச் செய்கை, பண்ணையாளர்கள் மீது சிங்களவர்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு எதிராக முன்நின்று குரல் கொடுத்து வருகிறார்.

இந்த நிலையில் இவர் மீதான விசாரணை இவரது செயற்பாடுகளை முடக்கும் நோக்குடன் மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட செயல் என தெரியவருகிறது.

## புத்தரின்...

தகனம் செய்யலாம் என அமைச்சர் உதய கம்மன்பில குர்ஆன் தொடர்பில் பிழையான கருத்தை தெரிவித்திருக்கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் பௌத்த சிந்தனையின் பிரகாரம் செயல்படுவதும் இல்லை. அரசாங்கம் அமைத்த விசேட வைத்தியர் குழுவின் தீர்மானத்துக்கமைய செயல்படுவதும் இல்லை.

விசேட வைத்தியர் குழு அடக்கம் செய்வதற்கு அனுமதி அளித்திருக்கின்றது. அதனை அரசாங்கம் மறைத்துவருகின்றது. அதனால் அரசாங்கம் எந்த சிந்தனையில் செயல்படுவதென்று யாருக்கும் தெரியாமல் இருக்கின்றது- என்றார். (அ-எ)

## துளசேந்திர...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறைகளிலும் முன்னணி வகிப்பதை அறிந்து கொள்ள முடியும்.

அமெரிக்காவின் கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரியான சுந்தர் பிச்சை கூட தமிழகத்தை பூர்வீகமாகக்கொண்டவர்.

இது தவிர, மருத்துவத்துறை, பொறியியல் துறை, கணனித்துறை என்பவற்றில்கூட அமெரிக்காவில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றி வருகிறார்கள். தற்போது புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்திலும் பல முக்கிய பொறுப்புக்களில் இந்தியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கமுடியும்.

அமெரிக்க அரசியலில் செனட்டர்களாகவும் பல இந்தியர்கள் இருந்து வருகின்ற நிலையில் அமெரிக்கா இந்தியர்கள் பலரது புகுந்த வீடாகவே இருந்து வருவதுடன் இந்தியாவில் தமக்கு கிடைக்காத வசதி வாய்ப்புகளை அமெரிக்காவில் தாராளமாகவே பெற்றுவருவதை அறியமுடிகின்றது.

ஈழநாடு
Eelanadu
21.01.2021 வியாழக்கிழமை
சார்வரி, தை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# புத்தர் சிலை விவகாரம் எவ்வாறு தடுப்பது?

காணி பறிபோகின்றது - புத்தர் சிலை வைக்கப்படுகின்றது. இது ஒரு நெடுநாள் விவகாரம். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் தலைமைகளால் விவாதிக்கப்பட்டுவரும் விவகாரம். ஆனால், இன்று வரையில் இந்தப் பிரச்னைக்கு தீர்வில்லை. தீர்வைக் காணமுடிய வில்லை.

ஒவ்வொரு புத்தர் சிலை வைக்கப்படும்போதும் தமிழர் பக்கத்தில் அங்கலாய்ப்புக்களும் ஆவேசமான அறிக்கைகளும் வெளிவருகின்றன. தமிழ் குரல்கள் கொஞ்சம் அடங்கிப் போனதும் இன்னொரு சிலையுடன் மீளவும் பிரச்னை ஆரம்பிக்கின்றது. இவற்றின் தொடர்ச்சியாக, இன்று வடக்கு, கிழக்கெங்கும் சிலைகள் பல்கிப் பெருவிட்டன. ஆனாலும், அரசாங்கங்கள் ஓய்ந்துவிடவில்லை. தருணம் பார்த்து சிலைகளுடன் காத்திருக்கின்றனர். புத்தர் சிலை என்பது பிரச்னைக்குரிய விடயமல்ல. ஆனால், அது திட்டமிட்ட ஆக்கிரமிப்பின் அடையாளமாக பயன்படுத்தப்படுவதுதான் பிரச்னையானது.

நல்லாட்சி அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட ரணில் - மைத்திரி அரசாங்கமும் புத்தர் விவகாரத்தில் பெரிய முன்னேற்றங்களை காண்பிக்க வில்லை. ஆனாலும், கூட்டமைப்பு அரசாங்கத்தோடு நல்லிணக்கத்தில் இருந்ததால் சில விடயங்களைப் பேசக்கூடிய நிலைமை இருந்தது. இப்போது அந்த வாய்ப்பும் இல்லை. இலங்கையைப் பொறுத்தவரையில், ஒரு இடத்தில், புத்தர் சிலை வைக்கப்பட்டு விட்டால், அதனை சட்ட ரீதியில் அகற்றுவதென்பது முயல்கொம்பாகும். இலங்கையின் அரசியல் யாப்பை பொறுத்தவரையில், பௌத்தத்தைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. அந்த வகையில் நீதித்துறைக்கும் பௌத்தத்தைக் காப்பாற்றும், பாதுகாக்கும் கடப்பாடுண்டு. ஒவ்வொரு சிங்கள கட்சிகளுக்கும் அந்த கடப்பாடுண்டு. இதுதான் இங்குள்ள பிரதான பிரச்னை.

புத்தர் சிலை விவகாரத்திற்கும் காணிகள் பறிபோவதற்குமிடையில் ஒரு பிரிக்கமுடியாத தொடர்புண்டு. புத்தர் சிலைகள் எங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் காணிகளும் ஏதோவொரு வகையில் தென்னிலங்கையின் - பெரும்பான்மையின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடுகின்றன. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் - யுத்தம் ஒரு வகையில் இவ்வாறான விடயங்களை முன்னெடுப்பதற்கு தடையாக இருந்தது. 2009இற்கு பின்னரான நிலைமையின் கீழ், புத்தர் சிலைகளை வைப்பதும், காணிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக மத்தியின் அதிகாரத்திற்குள் கொண்டு செல்வதும் பல்வேறு வழிகளிலும் இடம்பெற்றுவருகின்றன. இது தொடர்பில் தமிழர் தரப்பு என்னதான் சத்தமிட்டாலும்கூட, இன்று வரையில் அதனை தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒரு வகையில் மாகாண சபை நிர்வாகம் இருக்கின்றபோது, ஓரளவு இவற்றை தடுப்பதற்கான வாய்ப்பு தமிழர்களுக்கு கிடைத்தது. ஆனால், தற்போது மாகாண சபை இல்லாத நிலையில், விடயங்கள் இன்னும் சிக்கலடைந்திருக்கின்றது.

தமிழ்க் கட்சிகள் வழமையாகக் கைக்கொள்ளும் முறைகள் எவற்றாலும், புத்தர் சிலை வருவதைத் தடுக்க முடியவில்லை. சர்வதேசத்திடம் முறையிடுகின்றோம் - ஐ.நாவில் முறையிடுகின்றோம் - என்று கூறிவிட்டு அமைதியாக இருக்கும் வழிமுறைகளும் இந்த விடயத்தில் பயனளிக்கவில்லை. சிவில் சமூக எதிர்ப்புக்கள் - அறிக்கைகள் எவற்றாலும் இந்த விடயத்தைத் தடுத்துநிறுத்த முடியவில்லை. ஏனெனில், இவைகளெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போதுதான், அரசாங்கங்கள் காரியமாற்றிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறாயின் புதிய வழிமுறைகள் தொடர்பில் தமிழ் கட்சிகள் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

தற்போதைய நிலையில் தமிழர்களிடம் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களைத் தவிர வேறு எந்தவொரு பலமும் இல்லை. பாராளுமன்றத்தில் உரத்துப் பேசுவதற்கு அப்பால் என்ன செய்யலாமென்று சிந்திக்க வேண்டும். புத்தாக்கம்மிக்க வழிமுறைகளை கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால், புத்தர் சிலைகளின் உற்பத்தி - காணி பறிபோதல் தொடரும். ஒன்றை தொடரவிட்டுக் கொண்டு கண்டனங்களை வெளியிட்டுக் கொண்டிருப்பதால் எந்தவொரு பயனுமில்லை.

# துளசேந்திரபுரத்திலிருந்து வாஷிங்டன் வரை!

- அலசுவது **இராஜதந்திரி** -

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடன் நேற்றைய தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட அதேசமயம் உப ஜனாதிபதியாக தமிழகத்தின் துளசேந்திர புரத்தை பூர்வீகமாகக் கொண்ட கமலாதேவி ஹரிஸ் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.



புதிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உப ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஆகியோர் உலகின் மிகப்பலம் பொருந்திய தலைவர்களாக பதவியேற்றுள்ளனர். இருந்த போதிலும் இவர்கள் தமது இளமைக்காலத்தில் பல்வேறு சவால்களையும் சந்தித்து விடாமுயற்சி, கடமை உணர்வு ஆகியவற்றின் மூலமாகவே முறையே அமெரிக்காவின் ஜனாதிபதியாகவும் உப ஜனாதிபதியாகவும் உயர்வடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ஜோ பைடன் இளமையில் தமது மனைவியையும் புதல்வி ஒருவரையும் விபத்தொன்றில் பறிகொடுத்த நிலையில் தற்கொலை செய்துகொள்ளவும் முற்பட்டார்.

**ஷியாமளா ஹரிஸ்**

உப ஜனாதிபதி கமலாதேவி ஹரிஸ் சிறு வயதில் தமது தாயார் ஷியாமளா கோபாலனால் பல சவால்களுக்கு மத்தியில் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தார்.

தமிழகத்திலிருந்து அமெரிக்காவுக்கு உயர் கல்விக்காக சென்ற ஷியாமளா கோபாலன் அங்கு ஜமேக்கா நாட்டவரான டொனால்ட் ஹரிஸ் என்பவரை திருமணம் செய்தார். எனவே, ஷியாமளா, டொனால்ட் ஹரிஸ் ஆகியோரின் புதல்வியே கமலாதேவி ஹரிஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

டொனால்ட் ஹரிஸ் , ஷியாமளாவை விவாகரத்துச் செய்ததையடுத்து அமெரிக்காவில் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் தமது வாழ்க்கையை மேற்கொண்ட ஷியாமளா, எத்தகைய சூழலிலும் தனது புதல்வி கமலாவுக்கு சிறந்த கல்வியை வழங்கியிருந்தார்.

சட்டத்தரணியாக தமது தொழிலை ஆரம்பித்த கமலா ஹரிஸ் செனட்டராகவும் பின்னர், படிப்படியாக அரசியலில் பலமடைந்து ஜனநாயகக்கட்சி சார்பாக போட்டியிட்டு தற்போது அமெரிக்க உப ஜனாதிபதியாகவும் உயர்ந்து நிற்கின்றார்.

அமெரிக்க ஜனாதிபதிகளாக மக்கள் அபிமானத்தை பெற்றவர்களது வாழ்க்கை பல சவால்களை கொண்டதாகவே விளங்கியிருந்தது.

**ஆபிரஹாம் லிங்கன்**

ஆபிரஹாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக வந்த வரலாற்றை மரக் குடிசையிலிருந்து வெள்ளை மாளிகை வரையென்று குறிப்பிட்டு அவரது ஏழ்மையான வாழ்க்கையையும் பின்னர் அவர் படிப்படியாக வாழ்வில் உயர்ந்ததையும் குறிப்பிடுவார்கள்.

இதேபோல, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரொனால்ட் ரீகன் தமது சிறு பராயத்தில் பல கஷ்டங்களை அனுபவித்து பின்னர் திரையுலகில் பிரவேசித்து நாளடைவில் அரசியலில் ஈடுபட்டு அமெரிக்க ஜனாதிபதியானார்.

ஜனாதிபதியாக இருந்த பில் கிளின்டனுடைய வாழ்க்கையும் சிறுவயதில் பல சிரமங்களை கண்டிருந்ததாகவே விளங்கியிருந்தது. ஆயினும் அவர் கல்வியில் சிறந்து விளங்கி பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்கு புலமைப்பரிசில் பெற்றுச்சென்று அங்கே பட்டம்பெற்ற முதலாவது அமெரிக்க ஜனாதிபதியென்ற பெருமைக்கும் உரியவரானார்.

இதன் பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாக வந்த முதலாவது கறுப்பினத்தவரான பராக் ஒபாமாவும் சிறுபராயத்தில் விவாகரத்துக்குள்ளான பெற்றோர்களின் புதல்வராக தமது தாய்வழி பாட்டியாரால் வளர்க்கப்பட்டு கல்வியிலும் சிறந்து விளங்கி சட்டத்தரணியாகவும் அதன்பின்னர் அரசியலில் இறங்கி அமெரிக்க ஜனாதிபதியாகவும் தெரிவானார்.

அமெரிக்க ஜனாதிபதிகளுடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்து நோக்கும்போது அவர்கள் அனைவருமே அமெரிக்காவில் குடியேறிய குடும்பங்களின் வம்சாவளியை சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

**துளசேந்திரபுரம்**

தற்போதைய உப ஜனாதிபதி கமலாதேவி ஹரிஸ் தமிழகத்தின் துளசேந்திரபுரத்தை பூர்வீகமாக கொண்டவர். இவரது தாய்வழிப் பாட்டனார் கோபாலன் இந்திய வெளிநாட்டு இராஜதந்திர சேவையில் பணியாற்றியவர்.

கமலாதேவி ஹரிஸ் சிறுபராயத்தில் தமிழகம் வரும்போதெல்லாம் தமது பாட்டனாருடன் சென்னை கடற்கரையில் நடந்து திரிந்ததைக்கூட இன்றுவரை நினைவுகூர்ந்து வருகின்றார்.

உப ஜனாதிபதி கமலா ஹரிஸின் அமெரிக்க வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் அந்நாட்டில் அவரைப் போலவே இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட பல அமெரிக்கர்கள் பல்வேறு

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# ரஞ்சனுக்கு நீதி கிடைக்கும்வரை பாராளுமன்றத்தில் கறுப்புப்பட்டி

## சபையில் ஹரின் எம்.பி. அறிவிப்பு



கொழும்பு, ஜன. 21

**பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைக்கும்வரை பாராளுமன்றில் கறுப்புப் பட்டியை அணியவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.**

**பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

தான் நீதிமன்றத்தையும் நீதிபதிகளையும் விமர்சிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், மாறாக தனது நண்பனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கே குரல் கொடுப்பதாக தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் தற்போது வர்த்தமானி வெளியிடும் கலாசாரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதாகக் கூறினாலும் எந்தவொரு கடையிலும் விலைகள் குறைக்கப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்களை கைது செய்யப்படுவார்கள் என வாக்குறுதி அளித்து இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போதும் இன்று பயங்கரவாதி ஒருவரின் தொழிற்சாலையில் வேலை செய்த 10 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மாத்தளை ஆடை ஆலையில் 25 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஜன. 21

மாத்தளை மாவட்டத்தின், நாவுல பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 25 தொழிலாளர்கள் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொழிற்சாலையில் பணியாற்றும் 300 தொழிலாளர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் இவர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

## 621 பேர் குணமடைவு

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 47 ஆயிரத்து 215 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 621 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்து 419 ஆக உயர்ந்துள்ளது. இதில் 6 ஆயிரத்து 931 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 806 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக்கண்காணிப்பில் உள்ளனர்.





**மேடம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள். வருமானம் திருப்தி தரும். தாய்வழி உறவில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் விலகும்.

**இடபம்** தொடர்ந்து வரும் வெற்றிகளால் துணிவு கூடும் நாள். குடும்பத்தினர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நாள். நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள். திருமண முயற்சி வெற்றி தரும்.

**கடகம்** உயர்ந்த மனிதர்களின் சந்திப்பு கிட்டும் நாள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டுகொள்வீர்கள்.

**சிம்மம்** மதியத்திற்கு மேல் மனக்குழப்பம் அகலும் நாள். மறதியால் எடுத்த காரியத்தை செய்துமுடிக்க பெரும் பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** காலை நேரம் கலகலப்பும் மாலைநேரம் சலசலப்பும் உருவாகும் நாள். வருமானம் திருப்தி தரும். அரைகுறையாக பணிகள் நிற்கும்.

**துலாம்** நிதானத்துடன் செயல்படுவதன் மூலம் நிம்மதி கிடைக்கும் நாள். புதியவர்களின் சந்திப்புகிட்டும். எதிர்பார்த்த பணவரவொன்று வந்து சேரும்.

**விருட்சிகம்** முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும் நாள். இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**தனுசு** உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டும் நாள். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

**மகரம்** விரோதிகள் விலக விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். அரசியல்வாதிகளின் ஆத ரவு இருந் தும் சில காரியங்களைச் செயல்படுத்த இயலாது.

**கும்பம்** பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும் நாள்.விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் கூடும் நாள்தொழில் வளர்ச்சியாகும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். பாதியில் நின்றபணிகளை செய்து முடிப்பீர்கள்.

## புத்தர் சிலையை விற்க முயன்ற மூவர் முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு, ஜன. 21

முல்லைத்தீவில் ஐம்பொன் புத்தர் சிலையை விற்பனை செய்ய முயன்ற ஹற்றனை சேர்ந்த 3 பேரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

ஆறு கிலோ நிறையுடைய ஐம்பொன் புத்தர் சிலை சிறப்பு அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## தீர்ப்புகள் குறித்து பேசுவதற்கு எம்.பிக்களுக்கு உரிமையுண்டு

### முஜிபூர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

நீதிபதிகளின் தீர்ப்புகள் குறித்து பேசுவதற்கு பாராளுமன்றில் உள்ள 225 பேருக்கும் அதிகாரம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மக்களின் நீதிசார்ந்த அதிகாரங்கள் பாராமன்றத்தின் ஊடாகவே நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளமையினால் தீர்ப்புகள் குறித்து விமர்சனங்களை முன்வைப்பதற்கு பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நேற்று பாராளுமன்றில் கருத்து தெரிவித்த அவர், நீதிபதிகளின் தனிப்பட்ட விடயங்கள் அல்லாது அவர்களினால் வழங்கப்படும் தீர்ப்புகள் குறித்தே விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே, அவர்களினால் பெற்றுக் கொடுக்கப்படும் தீர்ப்புகள் குறித்து பேசுவதற்கு நாடாளுமன்றில் உள்ள 225 பேருக்கும் அதிகாரம் உள்ளது-என்றார்.



## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொரியத் தூதுவருடன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 21

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கொரியத் தூதுவர் வூன் ஜின் ஜியோன்ங்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மாளிகாவத்தையில அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் இந்த சந்திப்பு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் கடற்றொழில் செயற்பாடுகளின் அபிவிருத்தி மற்றும் நாடளாவிய ரீதியில் மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தி போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## சீனி இறக்குமதியில் மோசடிகள் இல்லை

கொழும்பு, ஜன. 21

சீனி இறக்குமதியில் 10 பில்லியன் ரூபா வரி மோசடி இடம்பெற்றிருக்கவில்லை என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றுக்கு சீனி இறக்குமதிக்காக வரிச்சலுகை வழங்கப்பட்டதன் ஊடாக இந்த வரி மோசடி இடம்பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், பாராளுமன்றில் இது குறித்து தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கேள்வியெழுப்பினர்.



இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, அவ்வாறான வரி மோசடிகள் இடம்பெறவில்லை எனவும் அது தொடர்பான அறிக்கைகளை தாம் சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் இந்த குற்றச்சாட்டு தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் அதில் வரி மோசடி இடம்பெற்றதாக பதிவாகவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.



## ஒரு வங்கி ஒரு கிராமம்' செயற்றிட்டம் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைப்பு

கிளிநொச்சி, ஜன. 21

'ஒரு வங்கி ஒரு கிராமம்' என்ற அடிப்படையில் தத்தெடுக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி - திருவையாறு கிராமத்தில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த செயற்திட்டம் தேசிய சேமிப்பு வங்கியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மு.ப 10.00மணிக்கு, திருவையாறு பொது நோக்கு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

## ஆயிரம் போதை மாத்திரைகளுடன் கொதலாவலபுரவில் இருவர் கைது

கல்கிசை,ஜன.21

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொதலாவலபுர பகுதியில் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கொதலாவலபுர வித்தியால மாவத்தை பகுதியில் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை மறித்து சோதனைக்கு உட்படுத்திய போது அவர்களிடமிருந்து போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. ரத்மலான பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரிடமிருந்தும் சீ.ரப் வகையைச் சேர்ந்த ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## டிக்கோயா வைத்தியசாலையில் மேலும் ஒரு தாதிக்கு தொற்று

### 15 பேர் சுயதனிமைப்படுத்தல்

நுவரெலியா,ஜன.21

நுவரெலியா மாவட்டம் டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலையில் பணிபுரிந்து வந்த மேலும் ஒரு தாதியருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என நாவலப்பிட்டி பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை வெளியான பி.சி.ஆர். அறிக்கையில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலையில் தொற்றுக்குள்ளான தாதியருடன் தொடர்பு பேணிவந்த 9 தாதியர்கள் மற்றும் 6 உதவியாளர்கள் உட்பட 15 பேர் 14 நாள்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலையில் 07ஆம் இலக்க வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அந்தப் பெண்ணின் மூலம் இந்தத் தாதியருக்கு கொரோனா பரவியுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதுவரையில் டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலையில் பணிபுரிந்துவரும் உத்தியோகத்தர்களில் 50 இற்கும் மேற்பட்டோர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (எ)

## உயர்நீதிமன்ற வளாகத்தில் 4 ஊழியர்களுக்கு தொற்று

கொழும்பு, ஜன. 21

உயர்நீதிமன்ற வளாகத்தில் மொத்தம் 04 ஊழியர்களுக்கு நேற்று புதன்கிழமை கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அவர்களில் ஒரு பெண் பாதுகாப்பு அதிகாரியும், பராமரிப்பு உறுப்பினர் ஒருவரும், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவு அறையில் உள்ள ஊழியர் ஒருவரும் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள்கிழமை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்பட்ட 100 பி.சி.ஆர் சோதனைகளில் நான்கு ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

மீதமுள்ள பணியாளர்களுக்கு பி.சி.ஆர் சோதனைகள் இன்று நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஊழியருக்கு கொரோனாத் தொற்று!

### காணிப் பதிவகம் முடக்கம்

மட்டக்களப்பு, ஜன.21

**மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் காணிப் பதிவகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக காணிப் பதிவகத்தின் செயல்பாடுகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.**

காணிப் பதிவகத்தில் பணிபுரியும் ஊழியர் நேற்று கடமைக்காக வருகின்ற வேளை வீதி விபத்தில் சிக்கிய நிலையில் களுவாஞ்சிக்குடி வைத்தியாலையில் சேர்க்கப்பட்டபோது அங்கு மேற்கொண்ட அன்ரிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

மாவட்ட காணிப் பதிவகத்தில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தங்களின் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நோய்த் தொற்று அறிகுறிகள் ஏற்படுகின்றபோது சுகாதாரத்துறையினரைத் தொடர்பு கொள்ளுமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

காணிப் பதிவகத்தின் சேவைகளைப் பெறுவதற்கு வருகின்ற பொதுமக்கள் மறு அறிவித்தல் வரும் வரை இந்தச் சேவைகளைப் பெற முடியாது எனவும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மேலும் தொரிவித்தார்.

## கழிவுப்பொருட்களை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம்

கொழும்பு, ஜன. 21

உள்ளூராட்சி நிறுவனங்களினூடாக தினந்தோறும் சேகரிக்கப்படும் எரிக்கக்கூடிய கழிவுப்பொருட்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவித்துள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் பணிப்பாளர் நளின் மானப்பெரும, "கொழும்பு மாநகர சபை நாளாந்தம் சுமார் 450 தொன் கழிவுப்பொருட்களை சேகரிக்கின்றது.

கரந்தியான குப்பை மேட்டிற்கு எடுத்துவரப்படும் கழிவுப்பொருட்களை பயன்படுத்தி இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 700 தொன் கழிவுப்பொருட்களை பயன்டுத்தி 10 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அதனை தேசிய மின்சார வலைப்பின்னலுடன் ஒன்றிணைக்க முடியும்.

இந்த திட்டத்திற்கு கொழும்பு மாநகர சபையினால் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் போதுமானதாக இல்லை.

மொறட்டுவை, தெஹிவளை-கல்கிசை கோட்டே, ஹோமாகம, மஹரகம மற்றும் பொரலஸ்கமுவ போன்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் குப்பைகளையும் பயன்படுதுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (அ)

## பாலியல் தொல்லை கொடுத்த பிரதேச செயலாளர் கைது

கொழும்பு, ஜன. 21

இரத்தினபுரி கிரிஎல்ல பிரதேச செயலாளர் பெண் அதிகாரி ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்தமை தொடர்பில்கைது செய்யப்பட்டுப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கிரிஎல்ல பிரதேச செயலக சிறுவர் விவகார பிரிவுப் பெண் அதிகாரி ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டின்படி பிரதேச செயலாளர் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

## முகக்கவசம் இல்லை மேலும் 31 பேர் கைது

கொழும்பு,ஜன.21

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் நேற்று முன் தினம் மேலும் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள காணொலிப்பதிவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

**விண்ணக வாழ்வின்**
**பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



**திருமதி**
**மரியதாசம்மா**
**பீற்றர் திசநாயகம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

**மலர்வு: 10.01.1932**
**உதிர்வு: 21.01.2009**

*"உயிர்ப்பும் உயிரும் நானே*
*என்னில் விசுவாசம் கொள்பவன்*
*இறப்பினும் வாழ்வான்"*

பாசமிகு உடன்பிறப்பாய்
அன்புமிக்க அன்னையாய்,
நல் ஆசானாய்,
பரிவுமிக்க அம்மம்மாவாய்
கண்டிப்பும் காருண்யமும் கொண்டவராய்
எங்கள் வாழ்க்கைப் பாதையில்
இன்பங்களில் இறுமாப்பற்றும்
இன்னல்களில் தைரியத்துடன்
மீண்டெழு வல்லமை தந்த அன்னையே
கால ஓட்டத்தில் உமைப் பிரிந்து
ஆண்டுகள் பன்னிரண்டு
கழிந்திடினும் எம் இதயங்களில்
நினைவுகள் நிலைத்திருக்கும்!

மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்

# தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் கோட்டாபய அரசு

## சபையில் அநுரகுமார சீற்றம்

கொழும்பு, ஜன. 21

**பெருந்தோட்டத் தொழிலாளர்களை இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**



இது தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2020 மார்ச் முதலாம் திகதி முதல் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்ற உறுதிமொழியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார். கம்பனி வழங்க மறுத்தாலும் அதனை பெற்றுக்கொடுப்போம் எனவும் உறுதியாக கூறினார். ஆனாலும் இன்னும் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்ற பிரதமர், ஆயிரம் ரூபா நிச்சயம் கிடைக்கும் என சத்தியம் செய்தார். அந்த உறுதிமொழியும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்தும் ஆயிரம் ரூபா குறித்த உறுதிமொழியை பிரதமர் வழங்கினார். ஆனால் இன்னும் சம்பள உயர்வு கிடைக்கவில்லை. தொழிலாளர்களை இந்த அரசாங்கம் ஏமாற்றி வருகின்றது-என்றார்.



# வடமராட்சிக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அட்டூழியம்

யாழ்ப்பாணம், ஜன. 21

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்கள் பருத்தித்துறை மீனவரின் வலைகளை அறுத்து அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

“இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை சுப்பர்மடம் இறங்குதுறையிலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் தொழிலுக்காக நேற்று அதிகாலை படகில் சென்றேன்.

அங்கு இந்திய மீனவர்களின் 4 படகுகள் தொழிலில் ஈடுபட்டிருந்ததுடன், எனது 20 வலைகளை அவர்கள் அறுத்து எடுத்திருந்தனர்.

வலைகளைத் தருமாறு கேட்டேன். இந்திய மீனவர்கள் கற்களால் எனது படகை நோக்கி எறிந்தனர். தமக்கு அருகே வந்தால் தாக்குதல் நடத்துவோம் என்று இந்திய மீனவர்கள் மிரட்டினார்கள். அவர்கள் முகத்தை தெரியாதவாறு துணி கட்டியிருந்ததுடன், கொட்டன்களை வைத்திருந்தனர்.

பல மணிநேரம் வலைகளைக் கேட்டு காத்திருந்துவிட்டு, ஏமாற்றத்துடன் கரை திரும்பியுள்ளேன்.

சுமார் 3 லட்சம் ரூபா வலைகளை இழந்துள்ளேன்” என்று பாதிக்கப்பட்ட மீனவரான சுப்பர்மடம் மீனவர் சங்கத் தலைவர் தே.தேவதாசன் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளார்.

# கொரோனா ஔடதத்தை தயாரித்த தம்மிக்கவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜன. 21

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக ஔடதத்தை தயாரித்த கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பண்டாரவுக்கு எதிராக பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவருக்கு எதிராக கேகாலை சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தம்மிக்க பண்டாரவால் தயாரிக்கப்பட்ட ஔடதத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சென்ற சிலருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்



தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறு இருப்பினும் நேற்றும் அநேகமான மக்கள் ஔடதத்தை கொள்வனவு செய்வதற்காக அவரது வீட்டின் முன் கூடியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# கொரோனா பாதித்தவர்களின் மத உணர்வை மதிக்கவேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 21

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மத உணர்வுகளை மதிக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்கள் இலங்கை அரசாங்கத்தினால் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. எனினும், இறந்த முஸ்லிம்களின் சடலங்களை அவர்களின் மத நம்பிக்கைக்கு இணங்க அடக்கம் செய்யுமாறு பல்வேறு தரப்புக்களாலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மத உணர்வுகளை மதிக்க வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்த அனைவரினதும் குடும்பத்தினருக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், சர்வதேச சுகாதார வழிகாட்டுதல்களின்படி மதநம்பிக்கைகளை பின்பற்ற அனுமதிப்பதன் மூலம் உரிமையையும் கௌரவத்தையும் மதிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இலங்கை 1955 இல் கைச்சாத்திட்ட சர்வதேச மனித உரிமை பிரகடனத்தில் அனைவரும் கற்பித்தல், பின்பற்றுதல், வழிபடுதல் போன்றவற்றில் தங்கள் மத நம்பிக்கையை பின்பற்றுவதற்கான உரிமையுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். வைரஸ் தொற்று சர்வதேச சவால்களை உருவாக்கினாலும் அதற்காக இரக்க குணத்தையும் நம்பிக்கைகளை மதிப்பதையும் இழக்கும் நிலையேற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் பலருக்கு கொரோனா உறுதியானது

கொழும்பு, ஜன. 21

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் பலருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அமைச்சில் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் சுகாதார அமைச்சில் 08 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானதோடு அவர்களுடன் தொடர்புடைய 74 பேர் தனிமைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முடிவுகளை அடிக்கடி மாற்றியமைக்கும் அரசு

## மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையம் கவலை

கொழும்பு, ஜன. 21

தமது முடிவுகளை அடிக்கடி மாற்றியமைக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கவலையை எழுப்புவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயம் மற்றும் தமக்கான கடமைகளை நிராகரித்தல் போன்ற தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கோளிட்டு அறிக்கையொன்றை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

பத்து வழக்குகளை ஆராய்ந்து இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பின் தோல்விகள் மற்றும் குறைபாடுகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அடையாளப்படுத்தியுள்ளது.

இந்த வழக்குகளில் பெரும்பாலானவற்றில், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக நீதிக்காகக் காத்திருப்பதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை மற்றும் திருகோணமலையில் ஐவர் கொல்லப்பட்ட சம்பவங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே இந்த விடயத்தில் தற்போதைய அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் சட்ட சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. மேலும் இந்த நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பு மூலம் எப்போதும் நீதி பெறுவதில் நம்பிக்கையை இழந்து வருகின்றனர் என்றும் அந்தஅமைப்பு கூறியுள்ளது.

# மருந்துப்பொருளாகக் கஞ்சாவை அரசு பிரகடனப்படுத்தவேண்டும்

## பெங்கமுவே நாலக்கதேரர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் மருந்துப் பொருளாக, கஞ்சாவைப் பிரக டனப்படுத்தவேண்டும் என பெங்கமுவே நாலக்க தேரர் வலியுறுத்தியுள்ளார்.

வெள்ளைக்காரர்கள் அனு மதி இன்றி, கஞ்சா பயிரிட வும் பயன்படுத்தவும் முடி யாது என்றே தடை விதித்தி ருந்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கடந்த 1984ஆம் ஆண்டு எந்தவொரு முறை யிலும் கஞ்சாவை பயன் படுத்தக்கூடாது என சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும், ஏன் அவ்வாறு செய் யப்பட்டுள்ளது எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கஞ்சா என்பது மருந்துப் பொருள் என்றும் புத்த பெரு மான் இதை மருந்துப்பொரு ளாக ஏற்றுக்கொண்டுள்ளதாக வும் ஏன் எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இந்த மருந் தைப் பயன்படுத்தி நோயா ளர்களை குணப்படுத்த நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் கூறினார்.

உள்நாட்டு மருந்துக்கு தேவையான கஞ்சாவை பயி ரிட அனுமதி அளிக்கப்பட வேண்டும் எனவும் பெங்க முவே நாலக்க தேரர் வலியு றுத்தினார்.

# மாகாணத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு தயார்

## நிமல் புஞ்சிஹேவா அறிவிப்பு



கொழும்பு, ஜன. 21

**மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் தமது ஜனநாயக உரிமையுடன் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதே தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு என ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் அதற் காக ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் பேச்சு நடத்தி முடிவு ஒன்றை எட்ட வேண்டும். அவ் வாறு தீர்மானம் மேற்கொள் ளப்பட்டால் மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு தேர் தல் ஆணைக்குழு தயாராகவே உள்ளது.

மாகாணசபை கட்டமைப்பு நாட்டில் இப்போதும் உள்ளது. அதற்கான சட்டங்கள், அதற் கான அமைச்சுக்கள், பொறி முறைகள் என அவை அனைத் தும் நடைமுறையில் உள்ளன.

எனினும் அவை ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகளினால் செயற்படுத்தப்படுகின்றன. அதனை முழுமையானதாகக் கருதமுடியாது என்பதால் மாகாணசபைத் தேர்தல் நடத் தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவேண்டும். அதனூடாக மக்களுக்கான ஜனநாயகம் கிட்டுவதுடன் அதன் மூலம்மக்களுக்கான சேவைகள் சென்றடைய வேண் டும் என்பதே தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு.

புதிய தேர்தல் முறை, எல்லை நிர்ணயம் என பல் வேறு குறைபாடுகள் காரண மாக மேலும் பல வருடங்களை வீணடிக்க முடியாது. பழைய முறையில் தேர்தலை நடத்த முடி யும். அவ்வாறு நடத்து வதற்கு சிக்கல்கள் இருக்குமானால் அதற்கான ஒரு திருத்தத்தை மேற்கொள்ளவும் முடியும்.

அதேவேளை,தேர்தல் சட் டத்தில் திருத்தம் செய்வது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

புதிய ஆணைக்குழு பொறுப்பை ஏற்றுக்கொண்ட மறுநாளே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அது தொடர் பில் பேச்சு நடத்தியுள்ளது.

தேர்தல் சட்டத்தில் திருத் தங்கள் மேற்கொள்வது அவசி யம். அதற்கான செயற்பாடுகள் மந்த நிலையில் உள்ள நிலை யில் அதனை நிவர்த்திக்க நட வடிக்கை எடுக்கவேண்டியுள் ளது. அது தொடர்பில் பாராளு மன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமித்து அதற்கான பரிந்துரை களை பெற்றுக்கொள்ள முடியும்.

அது தொடர்பிலும் பிரதம ரோடு கலந்துரையாடியுள் ளோம் - என்றார்.

# பாடசாலை பாடவிதானங்களில் ஆயுள்வேத வைத்திய முறைகள்

கொழும்பு, ஜன. 21

பாடசாலை பாட விதானங் களில் ஆயுள்வேத வைத்திய முறைகளை இணைத்துக்கொள் வதற்கு பரிந்துரை செய்ய சுதேச வைத்திய முறைகளின் மேம் பாடு, கிராமிய மற்றும் ஆயுர் வேத வைத்தியசாலைகள் அபி விருத்தி மற்றும் சமூக சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆயுள்வேத வைத்திய முறை தொடர்பாக பாடசாலை மாண வர்களை தெளிவூட்டுவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக் கான பாட விதானங்களில் ஆயுள்வேத வைத்திய முறையை இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சுடன் கலந்துரை யாடியதாகவும் அவர் குறிப்பிட் டார்.

(அ)

# ராஜாங்க அமைச்சரின் சாரதிக்கு கொரோனா

கொழும்பு, ஜன. 21

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவின் சாரதிக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கேகாலை பொது வைத்திய சாலையின் பேச்சாளர் ஒருவர் இந்த விடயத்தைத் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த, அவரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் கொக்கல பிரதேசத் தில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சரின் இரண்டு மகன்கள், சாரதி, பாதுகாப்பு அதிகாரிகள் மற் றும் செயலாளருக்கு கொரோனா தொற்று ஏற்பட வில்லை என்பது மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோத னையில் உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

எவ்வாறாயினும், அமைச்ச ருடன் நெருங்கிப் பழகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேரை சுய தனி மைப்படுத்திக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவு றுத்தியுள்ளனர்.

(அ)

# சம்பள விடயத்தில் கம்பனிகளால் தன்னிச்சையாக செயற்படமுடியாது

கொழும்பு, ஜன. 21

சம்பள உயர்வு விடயத்தில் தோட்டக்கம்பனிகளால் தன் னிச்சையாக செயற்படமுடி யாது என அமைச்சரும் அமைச் சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் உடனான சந்திப் பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பெருந்தோட்டத் தொழிலா ளர்களுக்கு குறைந்தபட்ச நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான முடிவாகும்.



அந்த முடிவை நிறைவேற் றும் பொறுப்பிலிருந்து அர சாங்கம் விலகாது. சவால்களை எதிர்கொள்ளும்.

சம்பள உயர்வு விடயத்தில் தோட்டக்கம்பனிகளால் தன் னிச்சையாக செயற்படமுடியாது.

கடந்த காலங்களில் 50 ரூபா வைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்பட் டது - என்றார்.

(அ)

# தயாசிறி குணமடைவு

கொழும்பு, ஜன. 21

கொரோனா தொற்று உறுதி யான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குணமடைந் துள்ளார் என அறிவிக்கப் பட்டுள்ளது.



ஜனவரி 8 ஆம் திகதி கொரோனா தொற்று அவருக்கு உறுதி செய்யப்பட்டதை அடுத்து ஹிக்கடுவ சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட் டார்.

இந்நிலையில் நேற்று அவர் வீடு திரும்பியுள்ளார் எனவும் தான் கொரோனா தொற்றில் இருந்து சுகம் பெற மருந்தாக எந்தப் பாணியையும் உட் கொள்ளவில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

# மன்னாரில் அதிகரித்துவரும் கொரோனா தொற்றாளர்கள்

## அதிகளவு வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தல்

மன்னார், ஜன. 21

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வாரங் களாக கொரோனா தொற்றாளர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியா ளர்கள் எனப் பலருக்கு கடந்த வாரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

இந்தப் பரிசோதனைகளின்போது மன்னார் நகரப் பகுதி மற்றும் பஸார் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களில் அதிகளவானோருக்கு கொரோனா தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் சுகாதார சேவைகள் பணிமனையினர் மற்றும் சுகாதாரத்துறையினர் இணைந்து இதுவரை பிரதான கடைத் தொகுதி களில் சுமார் 15 வர்த்தக நிலையங்களை மூடியுள் ளனர். அத்துடன் வர்த்தக நிலையங்களின் உரிமை யாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிலர் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அத்தியாவசிய தேவைகள் இன்றி நகர் பகுதிக்குள் வருவதையோ அல்லது கூட்டம் கூடுவதையோ தவிர்க்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தப்பியோடிய கொரோனா நோயாளி பிடிபட்டார்

கொழும்பு, ஜன. 21

புனானை சிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்று வந்த நிலை யில், தப்பிச்சென்ற கொரோனா நோயாளி பிடிபட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள் ளார்.

43 வயதான அந்த நபர், எஹலியகொடை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டார் என அவர் மேலும் கூறினார்.

கொலன்னாவை - மீதொட்ட பகுதியில் உள்ள பேக்கரி ஒன் றில் பணியாற்றும் அந்த நபர் கடந்த 13ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டார்.

பி.சி.ஆர் முடிவில் கொரோ னாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, கடந்த 17ஆம் திகதி, கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் புனானை சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைப் பெற்று வந்த அவர், நேற்றுமுன் தினம் இரவு 7.30 மணியளவில் தப்பிச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வாழ் இந்தியர்கள் மீது குவியும் கவனம்!

கமலா ஹாரிஸ் ஜனநாயகக் கட்சியின் அமெரிக்க துணை அதிபர் வேட்பாள ராக அறிவிக்கப்பட்ட பின்பு இந்திய - அமெரிக்க வம்சாவளி சமூகத்தினரிடையே அவரைப் பற்றிய விவாதங்கள் அதிகரித்துள்ளன.

ஜமெய்க்காவைப் பூர்விகமாகக் கொண்ட தந்தை டொனால்ட் ஹாரிஸூக்கும், இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்ட தாய் சியாமளா கோபாலனுக்கும் கமலா ஹாரிஸ் பிறந்தார்.

1964ஆம் ஆண்டு டொனால்ட் ஹாரிஸ் அமெரிக்காவில் குடியேறினார். அதற்கு அடுத்த ஆண்டு, அதாவது 1965இல் தான் அமெரிக்காவில் குடியேற்றம் மற்றும் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம் அமெரிக்காவில் குடியுரிமை கோருபவர்களுக்கு அவர்கள் பிறந்த நாட்டின் அடிப்படையில் அல்லாமல் அவர்களுக்கு இருந்த திறமைகளின் அடிப்படையில் முக்கியத்துவம் கொடுத்தது.

இதன் காரணமாக ஆசிய நாடுகளிலிருந்து பல்வேறு துறைகளில் திறன் பெற்றிருந்த தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் அமெரிக்காவுக்கு குடிபெயரத் தொடங்கினார்கள்.

**அமெரிக்காவில் உள்ள இந்திய அமெரிக்கர்களின் எண்ணிக்கை**

1957ஆம் ஆண்டு தலிப் சிங் சாந்த் அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் அமெரிக்க தேர்தலில் வென்ற முதல் இந்திய அமெரிக்கர் ஆனார்.

அதன்பிறகு பியூஸ் “பாபி“ ஜிண்டால், பிரமிளா ஜெயபால் உள்ளிட்ட பலரும் அமெரிக்கத் தேர்தலில் வென்று உள்ளார்கள்.

அமெரிக்காவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள் எண்ணிக்கை வெறும் 1.5 சதவிகிதம்தான்.

அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களின்படி 2000வது ஆண்டில் அமெரிக்காவில் சுமார் 19 லட்சம் இந்தியர்கள் இருந்தனர். 2015 ஆம் ஆண்டு இது கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகரித்து 39 லட்சத்து 82 ஆயிரம் ஆனது.

பிற குடியேற்ற சமூகங்களை விட இந்திய அமெரிக்கர்கள் அதிக பணம் படைத்தவர்கள் மட்டுமல்ல் அதிகமான கல்விப் பின்புலமும் உடையவர்களாக இருக்கிறார்கள்.

பியூ ரிசர்ச் அமைப்பின் தகவலின்டி அமெரிக்காவில் வாழும் இந்தியர்களில் 40 சதவிகிதம் பேருக்கு முதுநிலைப் பட்டம் உள்ளது. இந்திய வம்சாவளியினரின் 7.5 சதவிகிதம் மட்டுமே வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கிறார்கள். இதுவே ஒட்டுமொத்த அமெரிக்காவின் விகிதம் 15. 7 சதவிகிதமாக உள்ளது.

சிறிய எண்ணிக்கையில் இருந்தாலும் இந்திய வம்சாவளி அமெரிக்கர்கள் எப்படி அமெரிக்க தேர்தலில் தாக்கம் செலுத்த முடியும். இதைப் புரிந்து கொள்ள இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கர்கள் அந்நாட்டு தேர்தல்களில் எவ்வாறு வாக்களிக்கிறார்கள் என்பதை ஆராய வேண்டும்.

**இந்திய அமெரிக்கர்கள் வாக்களிப்பது எவ்வாறு?**

அமெரிக்காவில் சுமார் 40 லட்சம் பேர் இந்தியாவை பூர்விகமாகக் கொண்டவர்கள் உள்ளனர். மெக்சிக்கோவுக்கு அடுத்தபடியாக எண்ணிக்கையில் அதிகம் வளர்ச்சியடையும் குடியேற்ற சமூகமாக இவர்கள் உள்ளனர்.

அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளி விவரங்களின்படி 2000 மற்றும் 2018 ஆண்டுகளுக்கு இடையே இந்திய வம்சாவளியினரின் மக்கள் தொகை 137.2 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானவர்கள் நியூயோர்க், சிக்காக்கோ, சான் பிரான்சிஸ்கோ போன்ற பெரு நகரங்களில் வசிக்கிறார்கள். நியூயோர்க்கில் மட்டும் சுமார் 6 லட்சம் இந்திய வம்சாவளியினர் வசிக்கிறார்கள். சிக்காக்கோவில் 2



லட்சம் பேர் வசிக்கிறார்கள்.

அமெரிக்காவுக்கு வெளியே பிறந்தவர்களில் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் என்று அடிப்படையில் பார்க்கும்போது மெக்சிகோ மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்திய அமெரிக்கர்கள் மூன்றாவது இடத்தில் இருக்கிறார்கள் என்று பியு ரிசர்ச் அமைப்பு கூறுகிறது.

2014இல் மேற்கொள்ளப்பட்ட என்.ஏ.ஏ.எஸ் என்னும் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பின்படி 48 சதவிகித இந்திய - அமெரிக்கர்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிக்கிறார்கள் அல்லது ஜனநாயக கட்சி ஆதரவு மனநிலையுடன் இருக்கிறார்கள். ஆனால் வெறும் 22 வீதம் பேர் மட்டும்தான் குடியரசுக் கட்சிக்கு ஆதரவாக உள்ளனர்.

அமெரிக்க அதிபர் தேர்தல் நெருங்கும்போது எப்போதுமே ஜனநாயகக் கட்சியினர் மற்றும் குடியரசுக் கட்சியினரிடையே இந்திய வம்சாவளி வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்கான போட்டி தொடங்கிவிடும்.

இதற்கு காரணம் என்ன தெரியுமா? இரு கட்சிகளும் கிட்டத்தட்ட சம பலத்தில் இருக-்-கும் போர்க்கள மாகாணங்களான புளோரிடா, பென்சில்வேனியா, மிச்சிக்கன் ஆகிய மாகாணங்களில் இந்திய அமெரிக்கர்கள் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கிறார்கள். இந்த மாகாணங்களின் தேர்தல் முடிவுகள் ஒட்டுமொத்த அமெரிக்காவின் தேர்தல் முடிவை மாற்ற வல்லவை.

கடந்த தேர்தலில் இந்தியன் அமெரிக்கன் அட்டிட்யூட் சர்வே கருத்துக்கணிப்பில் 70 சதவிகித இந்திய அமெரிக்கர்கள் டொனால்ட் ட்ரம்பை விட ஜோ பைடனுக்கே வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள் என்று தெரியவந்துள்ளது.

**எச்1பி (H1B) விசா**

உலகிலேயே எச்1பி வகை விசாவை கொண்டுள்ளவர்களில் அதிகமானவர்கள் இந்தியர்கள்தான்.

சர்வதேச அடிப்படையில் பார்க்கும் பொழுது ஆண்டுதோறும் வழங்கப்படும் 85,000 எச்1பி விசா பெற்றவர்களில், சுமார் 70 சதவிகிதத்தை பெறுபவர்கள் இந்தியர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் தேர்தலுக்கு சில காலம் முன்பு தங்களது “அமெரிக்கக் கனவை“ பின்தொடரும் இந்தியர்களின் திட்டமான இந்த எச்1பி விசா திட்டத்தை நிறுத்தி வைத்தார் ட்ரம்ப்.

அமெரிக்கர்களின் பணி வாய்ப்பைப் பாதுகாக்கும் நோக்கில் கடந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு நிர்வாக ஆணையைப் பிறப்பித்தார் அவர்.

அதன்படி அமெரிக்க அரசின் முகமைகள் நேரடியாகவோ அவர்களின் கிளை அமைப்புகள் மூலமாகவோ வெளிநாட்டு தொழிலாளர்களை பணிக்கு அமர்த்த அவர் தடை விதித்தார். இவர்களில் பெரும்பாலானவர்கள் எச்1பி விசா உடையவர்கள். இந்த விசாவைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் அமெரிக்கா செல்லும் தகவல் தொழில்நுட்பத்துறையை சேர்ந்தவர்களுக்கு இது ஒரு பலத்த அடியாக இருந்தது.

இது செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்ட ஏ.ஏ.பி.ஐ. கருத்துக் கணிப்பில் எதிரொலித்தது.

அமெரிக்காவில் வசிக்கும் 35 சதவிகித ஆசிய இந்தியர்கள் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அதிபர் ஆவதை ஏற்க மாட்டோம் என்று அந்த கருத்துக் கணிப்பில் தெரிவித்திருந்தார்கள்.

தற்போது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடன் இந்திய சுதந்திர தினத்தின் போது எச்1பி விசா குறித்து பேசியிருந்தார். இப்போது பெரும்பாலானவர்கள் கவனம் அவர் மீது உள்ளது.


அந்த உரையில் வெறுப்பின் காரணமாக நிகழ்த்தப்படும் குற்றங்களுக்கு உள்ளானவர்கள், சட்டப்பூர்வ குடியேற்றத்தின் மீது விதிக்கப்படும் தடைகள், திடீரென நிறுத்தப்படும் எச்1பி விசா ஆகியவற்றால் பாதிக்கப்படுவோர் குறித்து தாம் வருத்தம் கொண்டுள்ளதாக பைடன் தெரிவித்திருந்தார்.

இதற்கு முந்திய அதிபர் தேர்தலில் 84 சதவீத இந்திய அமெரிக்க வம்சாவளியினர் ஒபாமா அதிபர் ஆவதற்கு வாக்களித்திருந்தனர் என்பதும் கவனிக்கப்பட வேண்டியுள்ளது.

> **குடியரசுக் கட்சியினரை விட ஜனநாயக கட்சியினர் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாட்டு குடியேறிகள் ஆகியோரை ஏற்றுக் கொள்வதில் தாராளவாத மனநிலையுடனேயே கடந்த சில தசாப்தங்களாக இருந்து வருகின்றனர். கமலா ஹாரிஸ் புதிய அரசில் முக்கிய பொறுப்பில் இருப்பதால் இந்திய அமெரிக்க வம்சாவளியினர் அமெரிக்காவில் இன்னும் ஒளிர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.**

குடியரசுக் கட்சியினரை விட ஜனநாயகக் கட்சியினர் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாட்டு குடியேறிகள் ஆகியோரை ஏற்றுக்கொள்வதில் தாராளவாத மனநிலையுடனேயே கடந்த சில தசாப்தங்களாக இருந்து வருகின்றனர்.

கமலா ஹாரிஸ் புதிய அரசில் முக்கிய பொறுப்பில் இருப்பதால் இந்திய அமெரிக்க வம்சாவளியினர் அமெரிக்காவில் இன்னும் ஒளிர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ●



# “எதற்காக வந்தோமோ அதையே செய்தோம்”

## விடை பெற்றவேளையில் டொனால்ட் ட்ரம்ப் அதிரடி

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவியில் இருந்து வெளியேறும் முன்னர் விடைபெறும் வகையில் ஓர் உரை நிகழ்த்தியுள்ளார். அதில், ”நாங்கள் என்ன செய்வதற்காக வந்தோமோ அதைச் செய்தோம். அதற்கு மேலும் செய்தோம்” என்று கூயுள்ளார்.

அதிபர் பதவியில் இருந்து விடைபெறும் வகையில் யூரியூப்பில் ட்ரம்ப் வெளியிட்ட உரையில், “நான் சவாலான மோதல்களை எதிர்கொண்டேன். ஏனெனில், அதற்குத்தான் நீங்கள் என்னை தேர்ந்தெடுத்தீர்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடனிடம் தோற்ற டொனால்ட் ட்ரம்ப், தேர்தல் முடிவுகளை இன்னும்கூட முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

அமெரிக்காவின் 46ஆவது அதிபராக ஜோ பைடன், துணை அதிபராக கமலா ஹாரிஸ் ஆகியோர் இலங்கை நேரப்படி, நேற்றிரவு 10.30 மணியளவில் பொறுப்பேற்றனர்.

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளுக்கு எதிராக ட்ரம்பின் ஆதரவாளர்கள் அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத்தின் மீது தொடுத்த வன்முறை தாக்குதல் அவரது பதவியின் கடைசி இரண்டு வார காலத்தை ஆக்கிரமித்துவிட்டது.

“அரசியல் வன்முறை என்பது அமெரிக்கர்களாகிய நாம் மதிக்கும் எல்லாவற்றிற்கும் எதிரான தாக்குதல். இதை ஒருபோதும் பொறுத்துக் கொள்ள முடியாது” என்று ட்ரம்ப் தமது விடைபெறல் காணொளியில் கூறியுள்ளார். சுமார் இருபது நிமிடங்கள் நீடிக்கும் இந்தக் காணொளியில் ஓர் இடத்தில்கூட ஜோ பைடன் குறித்து ட்ரம்ப் கருத்தேதும் தெரிவிக்கவில்லை.

**டிரம்ப் கூறிய முக்கிய விடயங்கள்**

இந்த மாதத் தொடக்கத்தில், அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத்தின் மீது தொடுக்கப்பட்ட வன்முறைத் தாக்குதலை “தூண்டியதாக” ட்ரம்ப் மீது ஏற்கெனவே பாராளுமன்ற பிரதிநிதிகள் அவையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து செனட் அவையில் விசாரணை நடைபெறும். செனட் அவை விசாரணை நடத்தி, குற்றச்சாட்டை உறுதி செய்யும் பட்சத்தில் அவர் பதவி நீக்கப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. ஆனால், அவர் பதவிக் காலம் அதற்கு முன்பே முடிவுக்கு வருவதால், அவர் மீண்டும் அமெரிக்க அரசு பதவிகளுக்கு போட்டியிடுவதற்கு தடைவிதிக்கப்படலாம்.

அமெரிக்க வரலாற்றிலேயே தமக்கு எதிராக இரண்டு முறை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பெற்ற முதல் அதிபர் ட்ரம்ப்தான்.

எனினும், பிரச்னைகளை விடுத்து தனது தலைமையிலான நிர்வாகம் சாத்தியமாக்கிய இலக்குகளை மட்டும் தனது காணொளியில் பட்டியலிட்ட ட்ரம்ப், “எனது நிர்வாகம் உலக வரலாற்றில் மிகச் சிறந்த பொருளாதாரத்தை கட்டமைத்துள்ளது” என்று கூறினார்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று குறித்த அச்சத்தால் கடந்த ஆண்டு மார்ச் மாதம் அதலபாதாளத்துக்கு சென்ற அமெரிக்க பங்குச்சந்தைகள் வீழ்ச்சியிலிருந்து குறுகிய காலத்தில் மீண்டதுடன், புதிய உச்சங்களை தொட்டு வருகின்றன.

எனினும், பொருளாதாரத்தின் மற்ற கூறுகள் இன்னமும் பல்வேறுபட்ட பிரச்னைகளை சந்தித்து வருகின்றன. அண்மைய மாதங்களில் அமெரிக்காவில்



எதிர்பார்த்தைவிட வேலை இழப்புகள் அதிகரித்து வருவதுடன், நுகர்வோர் பொருட்களின் விற்பனையும் சரிவை சந்தித்து வருகிறது.

“எனது தலைமையிலான நிர்வாகத்தின் குறிக்கோள் வலது அல்லது இடதுசாரி என்றோ, ஜனநாயகக் கட்சி அல்லது குடியரசு கட்சி என்றோ இல்லாமல் ஒட்டுமொத்த தேசத்தின் நன்மைக்காகவே இருந்தது” என்று ட்ரம்ப் கூறினார்.

இந்த நிலையில், ட்ரம்ப் பதவிக் காலம் முடிவதை அடுத்து அவரது செயல்பாடு குறித்து நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் வெறும் 34 சதவீதத்தினரே ஆதரவு வழங்கியுள்ளனர். அண்மைய ஆண்டுகளில் அதிபர் ஒருவரால் பெறப்பட்ட மிகக் குறைந்த மதிப்பீடாக இது உள்ளது.

**பைடன் எப்படி தயாராகிறார்?**

அமெரிக்காவின் அடுத்த அதிபராக பதவியேற்ற ஜோ பைடன் தனது மனைவி ஜில் பைடனுடன் கடந்த செவ்வாய்க்கிழமை டெலாவேரிலுள்ள தனது வீட்டிலிருந்து தலைநகரான வாஷிங்டனுக்கு புறப்பட்டார்.

அப்போது ஆற்றிய உணர்ச்சிபூர்வமான உரையில் “நான் இறக்கும்போது, டெலாவேர் என் இதயத்தில் எழுதப் படும்” என்று பைடன் கூறினார். உள்ளூர் நேரப்படி, நேற்று புதன்கிழமை காலை வெள்ளைமாளிகைக்கு சென்ற பைடன், பின்னர் பதவியேற்பு நிகழ்வில்



பங்கேற்பதற்காக உள்ளூர் நேரப்படி நண்பகல் 12 மணியளவில் (இலங்கை நேரப்படி இரவு 10.30) பாராளுமன்றக் கட்டட வளாகத்துக்கு சென்றார்.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் காரணமாக முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பல்லாயிரக்கணக்கான பாதுகாப்புப்படை வீரர்கள் களமிறக்கப்பட்டு வொஷிங்டன் முழுவதும் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோன்று பதவியேற்பு விழாவை நேரடியாக பார்க்க அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது.

புதிய அமெரிக்க அதிபர் பதவியேற்பு விழாவில் பங்கேற்கும் பாரம்பரிய வழக்கத்தை மீறவுள்ள ட்ரம்ப், நேற்று புதன்கிழமை காலையில் புளோரிடாவிலுள்ள தனது இல்லத்துக்கு புறப்பட்டார். அதாவது, 1869ஆம் ஆண்டுக்கு பின் தனக்கு அடுத்ததாக அதிபர் பதவியேற்க உள்ளவரின் பதவியேற்பு விழாவில் பங்கேற்காத முதல் அதிபராக ட்ரம்ப் உருவெடுத்துள்ளார்.





# ரஞ்சனை சபைக்குள் அழைத்துவரக்கூடாது

## ஆளும் தரப்பு கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 21

**பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்றத்துக்கு அழைத்துவரக்கூடாது என ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபையில் வலியுறுத்தினர்.**

பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சட்டப் பிரச்னை ஒன்றை முன்வைத்து, நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறைப் படுத்தப்பட்டிருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர ஏன் நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது எனக் கேட்டபோது, அதுதொடர்பில் ஒழுங்குப் பிரச்னைகளை எழுப்பி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சா:

சட்டத்தின் பிரகாரம் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்துக்கு வரமுடியாது. ஆனால் பொய்த் தர்க்கங்களை கொண்டு வந்து எதிர்க்கட்சியினர் அவரை எப்படியாவது பாராளுமன்றத்துக்கு அழைத்துவர முடியச் சிக்கின்றனர்.

ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டில் இருக்கும் அனைத்து வகையான நீதிமன்றங்களையும் அவமதித்து வந்தார். அதேபோன்று சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகளையும் விமர்சித்து வந்தார். இவ்வாறு பல சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர முயற்சிக்கின்றனர். இதற்கு இடமளிக்கக் கூடாது - என்றார்.

இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த:

ரஞ்சன் ராமநாயக்க இந்தச் சபையில் அனைத்து உறுப்பினர்களையும் விமர்சித்து வந்தார். நீதிபதிகளையும் மிகவும் மோசமான முறையில் விமர்சித்திருக்கின்றார். அவ்வாறு செயல்பட்ட ஒருவரையே எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்துக்கு அழைத்துவர முயற்சிக்கின்றனர்.

அதனால் நீதிமன்றங்களையும் நீதிபதிகளையும் விமர்சித்த ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அளித்திருக்கும் தீர்ப்பை நகைப்புக்குட்படுத்தியா, அவரை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் எனக் கேட்கின்றேன்- என்றார்.

இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர:

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த ஒரு கூற்றை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அரசமைப்பின் 89 ஆவது சரத்தின் பிரகாரம் மேல் நீதிமன்றத்தால் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டால் பாராளுமன்ற உறுப்பினரின் ஆசனம் வெற்றிடமாகும். அது தொடர்பில் தீர்மானம் எடுக்க சபாநாயகருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனக் கூறியிருந்தார். அவ்வாறு கூறியவர் மூன்று மாதங்களுக்குப் பின்னர் மாறுபட்ட கருத்தை இன்று கூறுகிறார். ரஞ்சன் ராமநாயக்க நாட்டின் அரசமைப்புக்கும், நீதித்துறைக்கும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளார். சிறப்புரிமையைப் பயன்படுத்தி உயர் நீதிமன்றத்தை அவமதிக்க வேண்டாமென கோருகின்றோம். - என்றார். (எ)

# முல்லை. குருந்தூர் மலை தமிழர்களுக்கே சொந்தம்

## சபையில் கஜேந்திரன் எடுத்துரைப்பு



கொழும்பு,ஜன.21

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் முன்னெடுக்கப்பட்ட எல்லை மீள்நிர்ணய நடவடிக்கை மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடத்தை, உடன் இரத்துச் செய்ய வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழர்களின் நிலங்கள் மோசமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் கொதித்தெழுந்துள்ளனர்.

ஆகையால், இதற்கு அவசரமான தீர்வு வேண்டும். மண்டைதீவு பகுதியில் இடம்பெற்ற காணி சுவீகரிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தினோம். இருப்பினும் இந்த வாரம் முழுவதும் நிலஅளவை செய்யப்படவுள்ளது.

அதேபோன்று குருந்தூர் பகுதிக்கு அண்மையில் சென்றோம். இதன்போது அங்குள்ள காட்டு மரங்கள் வெட்டப்பட்டு, பாதைகள் செப்பனிடப்பட்டுக் கொண்டு இருந்தன.

அத்துடன் நூல்களால் எல்லையிடப்பட்டும் இருந்தது. அத்துடன் கட்டுமானத்துக்கான அத்திபாரமும் வெட்டப்பட்டிருந்தது. இதைக் கேட்டபோது தொல்லியல் இடம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதி தமிழர்களுக்குச் சொந்தமானது. 2018ஆம் ஆண்டில் தமிழர்கள் இங்கு வழிபடத் தடையில்லை என முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் இங்கு வழிபட அனுமதி மறுக்கப்பட்டு இந்தப் பகுதியை புத்தமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம் இந்தப் பகுதியில் நிலஅளவை முன்னெடுக்கப்பட்டு எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட்டு வரைபடமொன்று தயாரிக்கப்பட்டது.

இந்த நிலஅளவைப் பணி முல்லைத்தீவு மாவட்ட நில அளவை அதிகாரிகளால் முன்னெடுக்காது கொழும்பிலிருந்து வந்த அதிகாரியால் முன்னெடுக்கப்பட்டது.

அந்த நிலஅளவை அடிப்படையிலேயே வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் அந்த இடம் குருந்தி விகாரைக்குச் சொந்தமானது என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்த வரைபடம் உடனடியாக இரத்துச்செய்யப்பட்டு இதுதொடர்பில் விசாரணை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (எ)

# தம்மிகவின் பாணியை ஊக்குவிக்கவில்லை

## அமைச்சர் கெஹலிய விளக்கம்

கொழும்பு,ஜன.21

தம்மிகவின் பாணியை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "தம்மிக பண்டாரவின் பாணி மருந்து தொடர்பில் கடந்த காலங்களில் அதிகம் பேசப்பட்டன.

மருத்துவ ரீதியான பரிசோதனைக்காக 2 வாரங்கள் அனுமதி கிடைத்துள்ளன. இந்நிலையில் இதுவரை அரசாங்கம் அது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர்பிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டவர்களில் சிலரும் பல்வேறு சிக்கல்



களை எதிர்நோக்கி உள்ளனர். எனவே இந்த வைரஸைக் குணப்படுத்துவதற்கான தெளிவான சான்றுகள் எங்கும் இல்லை.

அதாவது நீங்கள் தடுப்பூசி போட்டாலும் அப்படித்தான். அதற்கமையப் பார்த்தால் இந்தப் பாணி சிறந்தது. இந்தப் பாணி தொடர்பில் மேலும் பல தகவல்களைத் தேட வேண்டும். அரசாங்கம் இதை ஊக்குவிக்கின்றது என நான் நினைக்கவில்லை.

எந்தவொரு நபரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம். எது எவ்வாறாயினும், அரசாங்கம் இதைப் பயன்படுத்துமாறு, இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# எம்.சி.சி. ஒப்பந்த உள்ளடக்கம் அரசமைப்புக்கு முரணானதே

கொழும்பு,ஜன.21

ஐக்கிய அமெரிக்காவுடன் கைச்சாத்திடப்படவிருந்த எம்.சி.சி. ஒப்பந்தம் மற்றும் அதனுடன் இணைந்ததான உடன்படிக்கைகள் இலங்கையின் அரசமைப்புக்கு முரணான உள்ளடக்கங்களைக் கொண்டிருப்பதாக சட்டமா அதிபர், ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா, ஜனாதிபதியின் செயலர் பி.பீ. ஜயசுந்தரவுக்கு அறிவித்துள்ளார்.

இலங்கையின் சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் முரணாகவுள்ள இந்த ஒப்பந்தத்தை அவ்வாறே கைச்சாத்திட்டு அமுல்படுத்த முனைந்தால், அது பெரும் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என தனது ஆலோசனையில் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார் என சட்டமா அதிபரின் செய்தித் தொடர்பாளர் அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"சட்ட மா அதிபர், எம்.சி.சி. ஒப்பந்தம் மற்றும் அதனுடன் இணைந்த உடன்படிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி செயலருக்கு விசேட ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புபட்ட அரச நிறுவனம் மற்றும் அமைச்சு வழங்கியிருந்த மேற்பார்வைகள், பிரதமரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள், எம்.சி.சி. ஒப்பந்தம் மற்றும் அத னுடன் இணைந்த உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் நிபந்தனைகளும் இதன்போது அவதானத்துக்கு உட்படுத்தப்பட்டன.

இதனைவிட வெளிநாட்டு சொத்துக்கள் இந்தத் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் அனைத்து அவதானிப்புக்களையும் கவனத்தில் கொண்டு இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

20 பக்கங்களைக் கொண்ட



விரிவான ஆலோசனைகள் இதன்போது ஜனாதிபதி செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன்படி எம்.சி.சி. ஒப்பந்தம் மற்றும் அதனுடன் இணைந்ததான உடன்படிக்கைகள், இலங்கைச் சட்டத்துக்கும், அரசமைப்புக்கும் பொருத்தமற்றது எனவும் அது அவற்றுக்கு முரணாக அமைந்துள்ளதாகவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்த முற்பட்டால் சட்ட ரீதியாக பல தடைகள் உள்ளதாகவும் அந்த ஆலோசனையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது - என்றார். (எ)

இலங்கை சனத்தொகையில்

# ஒரு மில்லியன் மக்களில் 2465 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜன.21

**இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஒரு மில்லியன் மக்களில் 2 ஆயிரத்து 465 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இதேபோன்று கொரோனா தொற்றால் மொத்த சனத்தொகையில் ஒரு மில்லியன் மக்களில் 12 பேர் உயிரிழக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய சனத்தொகையில் ஒரு மில்லியன் மக்களில் 1121 பேர் தொற்றாளர்களாகப் பதிவாகின்றன போதிலும் அந்நாட்டில் ஒரு மில்லியன் மக்களில் 93 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் பதிவாகியுள்ள மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 500 ஐ தாண்டியுள்ளது.

அவர்களில் 46 ஆயிரத்து 594 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

மேலும் நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் 273 பதிவாகியுள்ளது.

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் நிறைவு

## ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிக்க நடவடிக்கை

கொழும்பு,ஜன.21

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் 31ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆராயும் ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்றுமுன் தினம் நிறைவடைந்தன.

நேற்று முன்தினம் இரண்டு சாட்சியாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட சாட்சி விசாரணைகளைத் தொடர்ந்து இந்த விசாரணை நிறைவடைந்தன.

இந்நிலையில் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை எதிர்வரும் 31ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த ஜனவரி 21ஆம் திகதி நிறைவடைந்தது. இதனையடுத்து, வர்த்தமானி மூலம் அந்தக் காலம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. (எ)

# வடக்கு - கிழக்கில் மழை பெய்யக்கூடும்

கொழும்பு,ஜன.21

வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்த பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதேவேளை, காலியிலிருந்து கொழும்பு, புத்தளம் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புக்களில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

காற்றின் வேகமானது 30 - 40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்களில் காற்றானது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது 10 - 20 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

கடல் நிலை: கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புக்கள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்கள் மிதமான அலையுடன் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அந்தக் கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாக காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி வழங்க

# இலங்கை அரசின் அனுமதிக்கு காத்திருக்கிறது இந்திய அரசு

கொழும்பு,ஜன.21

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதற்குத் தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தும் வரையில் காத்திருப்பதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதற்காக அண்டை நாடுகளிலிருந்து பல கோரிக்கைகளைப் பெற்றுள்ளதாக இந்திய அரசாங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து, பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார் மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளுக்கு நேற்றுப் புதன்கிழமை முதல் மானிய உதவியின் கீழ் கொரோனா தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் மொரீஷியஸைப் பொறுத்தவரை, தேவையான ஒழுங்குமுறை அனுமதிகளை அந்நாட்டு அரசாங்கங்கள் உறுதிப்படுத்தும் வரையில் இந்தியா காத்திருக்கிறது.

இந்தியாவின் இந்தத் தடுப்பூசி ஏற்றுமதித் திட்டமானது பல நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு எளிதில் தடுப்பூசியைப் பெற வழி வகுக்கும்.

உலக சமூகத்தின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நீண்டகால நம்பகமான பங்காளியாக இருப்பது இந்தியாவுக்கு மிகவும் பெருமை அளிக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (எ)

# குருந்தூர் மலையின் அகழ்வு ஆராய்ச்சியில் தமிழர்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்

## சாள்ஸ் எம்.பி. அமைச்சருக்கு கடிதம்



கொழும்பு,ஜன.21

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தை காலம் காலமாக தமிழ் மக்கள் வழிபட்டு வந்தனர். இந்நிலையில் இந்து ஆலயத்தின் அடையாளங்களை அழித்ததுடன் அந்தப்பகுதியில் தொல்லியல் சிதைவுகள் காணப்படுவதாகத் தெரிவித்து அகழ்வுப் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பகலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க ஆகியோருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தொல்பொருள் திணைக்களத்தின் ஆலோசனையில் கடந்த திங்கட்கிழமை, அகழ்வுப் பணிகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தாங்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டீர்கள்.

இதன்போது இந்துக் கடவுளின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு இருந்ததுடன், அகழ்வுப் பணியில் யாழ்.பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் விரிவுரையாளர்களையோ யாழ்.பிராந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஆராய்ச்சி உதியோகத்தர்களையோ உள்வாங்காமல் ஆரம்பித்தமையால் தமிழ் மக்களும் நானும் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம்.

மேலும் ஆராய்ச்சிப் பணி, வெளிப்படைத்தன்மையாக இருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

எனவே யாழ்.பல்கலைக்கழகத்தினரின் தொல்பொருள் பீடத்தினரையும் யாழ்.பிராந்திய தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும் இணைத்துக் கொள்ளும்படி தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்" என அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ)




# வெளிநாடுகளில் சிக்கியிருந்த 245 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு,ஜன.21

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலால் தென்கொரியாவில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த 245 பேர் நேற்றுக்காலை சிறப்பு விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கொரோனா அச்சுறுத்தலால் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்துக்கு அமைய இவர்கள் அனைவரும் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)



# சீனாவில் மிதக்கும் ரயில் அறிமுகம்

பீஜிங், ஜன. 21

சீனாவில் அடுத்தகட்ட சாதனையாக அதிவேக மிதக்கும் ரயில் அறிமுகமாகியுள்ளது. காந்த இயக்கவியல் அடிப்படையில் இயங்கும் இந்த ரயில் மணிக்கு 620 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் தென்மேற்கு ஜியோ தாங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த ரயிலை வடிவமைத்துள்ளனர்.

உயர் வெப்ப சுப்பர்கண்டக்டிங் தொழில்நுட்பத்தின் மூலம் இந்த ரயில் தண்டவாளங்களில் தொடாதவாறு மிதந்தபடி அதிவேகமாகப் பயணிக்கக் கூடியது. இந்த ரயிலில் சக்கரங்கள் இல்லாததால் உராய்வு மிகவும் குறைவாகவே இருக்கும். காந்த மயப்படுத்தப்பட்ட தாண்டவாளத்தின் மீது இந்த ரயில் காற்றில் மிதந்தபடி வேகமாகப் பயணிக்கும்.

தற்போது 69 அடி நீள மாதிரியை அறிமுகப்படுத்திய ஆராய்ச்சியாளர்கள், அடுத்த மூன்று முதல் 10 ஆண்டுகளுக்குள் இது முழு செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும் எனக் கூறியுள்ளார்கள். இந்த ரயில் மணிக்கு 620 கி. மீ. வேகத்தில் பயணிக்கக் கூடியது. இதன் மூலம் பயணித்தால் லண்டனிலிருந்து பாரிஸுக்கு 47 நிமிடங்களில் போய்விடலாம். (ஐ)

# துணியினாலான 'மாஸ்க்'கள் புதிய வைரஸை தடுக்காது



பாரிஸ், ஜன. 21

துணியில் தைத்த மாஸ்க் வகைகள் புதிய வைரஸ் தொற்றைத் தடுக்காது

வேகமாகப் பரவும் புதிய வைரஸிடம் இருந்து தப்புவதற்கு தரமான மாஸ்க் வகைகளை அணியுமாறு பிரான்ஸின் பொதுச் சுகாதாரத்துக்கான உயர் அதிகார சபை அறிவுறுத்தி உள்ளது.

இரண்டாம் வகைக்குள் அடங்கும் துணியினாலான மாஸ்க்கள் காற்றை வடிகட்டும் திறன் குறைந்தவை. அவை புதிய வைரஸ் தொற்றை தடுக்கக் கூடியவை அல்ல என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாற்றமடைந்த இங்கிலாந்து வைரஸ், தென்னாபிரிக்க வைரஸ் என்பன ஐரோப்பாவில் வேகமாகப் பரவி வருவதால் மாஸ்க் அணியும் நடைமுறைகளில் புதிய ஆலோசனைகளை சுகாதார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

வீடுகளில் சாதாரண துணியால் தயாரிக்கப்படும் மாஸ்க்களை அணிவதைத் தவிர்த்து முதலாம் வகைக்குள் அடங்கும் மீளக் கழுவிப் பயன்படுத்தக் கூடிய துணியாலான மாஸ்க்களை வாங்கி அணியுமாறும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதில் துணிகளால் தயாரிக்கப்படுகின்ற மாஸ்க்கள் 70 வீதமும் காற்றை வடிகட்டும் தன்மை கூடிய ரிசுக்களால் (பேப்பர்) முறைப்படி தயாரிக்கப்படு கின்ற மாஸ்க்குகள் 90 வீதமும் பாதுகாப்பானவை என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# ஒரேநேரத்தில் 130 கார்கள் மோதி ஜப்பானில் விபத்து!

## ஒருவர் பலி; 10 பேர் படுகாயம்



ரோக்கியோ, ஜன. 21

ஜப்பானில் வீசிய கடும் பனிப்புயலில் சிக்கி விரைவு நெடுஞ்சாலை ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த சுமார் 130 இற்கும் மேற்பட்ட கார்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகின. இந்த விபத்தில் கார்கள் கிட்டத்தட்ட குவியலாக காட்சியளித்தன.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 10 பேர் காயமடைந்தனர். கார்களில் சிக்கியுள்ள 200 பேரை மீட்கும் பணி நடக்கிறது.

நேற்றுமுன்தினம் இந்த அதிதீவிர பனிப்புயல் மியாகி மாகாணத்தில் உள்ள தோஹோகு நெடுஞ்சாலையை போர்வையை கொண்டு மூடியதுபோல் மாற்றிவிட்டது. பனிப்புயல் இந்த வீதியை கடக்கும்போது 100 கி.மீ. வேகத்தில் காற்று வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

சமீப வாரங்களில் ஜப்பான் கடுமையான பனிப் புயலால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த அதிவேக சாலையில் 50 கி. மீற்றர் வேகத்துக்கு மேல் செல்லக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், நூற்றுக்கணக்கான வாகனங்கள் விபத்தில் சிக்கியுள்ளன.

இதேவேளை, தொடர் பனி, பனிப் புயல் அச்சம் காரணமாக ஏராளமான வாகனங்கள் வீதியில் சிக்கியுள்ளன. போக்குவரத்து சேவைகள் கிட்டத்தட்ட முற்றாக ஸ்தம்பித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோல்ட்மன் சுற்றுச்சூழல் விருது அமேஸன் பழங்குடி தலைவிக்கு



சான்பிரான்சிஸ்கோ,ஜன. 21

கிறீன் நோபல் (Green Nobel) என்று அழைக்கப்படும் கோல்ட்மன் சுற்றுச்சூழல் விருது (Goldman Environmental Prize) என்ற உயரிய விருது ஈக்குவடோர் நாட்டின் பழங்குடி தலைவர் நெமோண்டே நென்கிமோவுக்கு சமீபத்தில் வழங்கப்பட்டது.

5 இலட்சம் ஏக்கர் அமேசன் காட்டை அழிக்க நினைத்த எண்ணெய் நிறுவனங்களை எதிர்த்து போராட்டம் நடத்தியும் வழக்கு தொடர்ந்தும் காப்பாற்றியுள்ளார்.

மொத்தம் 4000 பேர் மட்டுமே இருக்கும் பழங்குடி இன மக்களை வைத்து பெருநிறுவனம், அரசாங்கம் ஆகியவற்றை எதிர்த்து உலகில் அதிக உயிரினங்கள் வாழும் அமேஸன் எசுனி பூங்காவை காப்பாற்றி இருக்கிறார்.

6 வயது குழந்தைக்கு தாயான இவர் வயது வெறும் 35 தான். எண்ணெய் நிறுவனங்கள் லஞ்சம் கொடுத்து தன் மக்களை வாங்கி விடாமல் இருக்க அவர்களின் சுய முன்னேற்றத்துக்கு பல தொழில்களை உருவாக்கினார். சூரிய சக்தி மின்சாரம், மழை நீர் சேகரிப்பு , இயற்கை முறையில் கோகோ மற்றும் சொக்லெட் தயாரிப்பு வேலை போன்று பல உருவாக்கி உதவியுள்ளார். (ஐ)



# பொதுவெளிக்கு வந்தார் ஜாக் மா

பீஜிங், ஜன. 21

வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் ஜாக் மா பொது வெளியில் தோன்றினார்.

சீனாவின் முதல் பணக்காரரான ஜாக் மாவுக்கும், சீன அரசுக்கும் இடையே வார்த்தை மோதல் ஏற்பட்டது. தனது நிறுவனத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் சீன அரசின் செயல் பழமைவாதம் என்று ஜாக் மா விமர்சித்தார்.

இதைத் தொடர்ந்து ஜாக் மாவுக்கு சீன அரசு பல இடையூறுகளை அளித்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக ஜாக் மாவைக் காணவில்லை என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த நிலையில், வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஜாக் மா பொது வெளியில் தோன்றியுள்ளார். காணொலி வாயிலாக ஒரு நிகழ்வில் அவர் பங்கேற்றார். (ஐ)

# உலகம் முழுவதும் 60 நாடுகளில் உருமாறிய கொரோனா தொற்று

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

ஜெனிவா, ஜன. 21

உலகம் முழுவதும் 60 நாடுகளில் உருமாறிய கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் பரவும் புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால், அந்த நாட்டுடனான விமான போக்குவரத்தை பல்வேறு நாடுகள் தடை செய்துள்ளன. அத்துடன், சமீபத்தில் பிரிட்டனில் இருந்து வந்தவர்கள், பிரிட்டனில் இருந்து வேறு நாடுகள் வழியாக வந்தவர்களுக்கு கொரோனா பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் உலகின் 60 நாடுகளில் உருமாறிய கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# டெஸ்ட் சம்பியன்ஷிப் வரிசை: முதலிடத்தில் இந்திய அணி!

புதுடில்லி, ஜன. 21

பிரிஸ்பேன் டெஸ்டில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய தன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் இந்தியா 430 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியை இந்தியா 2-1 என்ற கணக்கில் வெற்றி கொண்டது. இதனால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புக்கான 30 புள்ளிகளை வசப் படுத்தியது. இதையடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் இந்தியா மொத்தம் 430 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியது.

நியூசிலாந்து 420 புள்ளிகளும், அவுஸ்திரேலியா 332 புள்ளிகளும் பெற்று அடுத் தடுத்த இடங்களில் உள்ளன.



ஆனால், புள்ளிகளுக்குரிய சதவீதத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் நிலையில் அதிலும் இந்தியா முதலிடம் (71.7 சதவீதம்) வகிக்கிறது.

நியூசிலாந்து 70 சதவீதத்துடன் 2ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியா 69.2 சதவீதத்துடன் 3ஆவது இடத்திலும் உள்ளன. (ஐ)



# வெற்றியை அதிகம் கொண்டாடதீர்கள்

## இந்தியாவுக்கு பீற்றர்சன் எச்சரிக்கை

லண்டன், ஜன. 21

ஆஸி. அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் வெற்றியை முன்வைத்து அதிகமாகக் கொண்டாட வேண்டாம் என்று இங்கிலாந்து முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் சென்ற இந்திய அணி, இருபது - 20 தொடரையும், டெஸ்ட் தொடரையும் வெற்றி கொண்டது.

வரலாற்று டெஸ்ட் தொடர் வெற்றியை இந்திய அணியினரும் ரசிகர்களும் தொடர்ந்து கொண்டாடி வருகிறார்கள்.

இந்நிலையில் இங்கிலாந்து முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன், தனது ருவிட்டர் பதிவில், "இந்தியா, பல தடைகளைத் தாண்டிக் கிடைத்த இந்த வெற்றியை கொண்டாடுங்கள். எனினும், உண்மையான அணி இன்னும் சில நாள்களில் இந்தியாவுக்கு வரவுள்ளது. அவர்களை நீங்கள் தோற்கடித்ததாக வேண்டும். எச்சரிக்கையுடன் இருங்கள். அடுத்த இரு வாரங்களுக்கு அதிகமாகக் கொண்டாடுவதை தவிர்த்து விடுங்கள்", என்று கூறியுள்ளார்.

இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிராக 4 டெஸ்ட், 5 இருபது -20, 3 ஒருநாள் விளையாடவுள்ளது. வரும் பெப்ரவரி 5ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இங்கிலாந்துடனான டெஸ்ட்:

# திமுத் உட்பட ஐவரை விடுவித்தது இலங்கை



கொழும்பு, ஜன. 21

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன உள்ளிட்ட ஐந்து வீரர்களை விடுவிக்க இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, இந்தத் தொடரில் இலங்கை அணியின் குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்ட 22 வீரர்களில் திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ், மினோட் பானுக, லஹிரு குமார மற்றும் நுவான் பிரதீப் ஆகியோர் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் துடுப்பெடுத்தாடுகையில் திமுத் கருணாரத்னவுக்குப் பெருவிரலில் பலத்த காயம் ஏற்பட்டது. அது மாத்திரமன்றி தொடை எலும்பு காயம் காரணமாகவும் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை அவர் தவறவிட்டார். இந்த சூழ்நிலையில், அணியை வழிநடத்தும் பொறுப்பு தினேஷ் சந்திமலுக்கு வழங்கப்பட்டது.

திமுத், இரண்டாவது போட்டியில் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் முழுமையாகக் குணமடையாததமையால், இந்தப் போட்டியிலிருந்தும் விலக்கப்பட்டுள்ளார்.

ஐந்து வீரர்கள் வெளியேறியமையால் இரண்டாவது டெஸ்டுக்கான இலங்கை அணிக் குழாமில் எஞ்சிய வீரர்களின் எண்ணிக்கை 17 ஆக காணப்படுகிறது.

விடுவிக்கப்பட்ட ஐந்து வீரர்களும் மேலதிக பயிற்சிக்காக இலங்கை கிரிக்கெட்டின் உயர் செயல்திறன் மையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

இரு தரப்பினருக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ஐ)



# சென்னை அணியிலிருந்து விலகினார் ஹர்பஜன் சிங்

சென்னை, ஜன. 21

ஐ.பி.எல். இருபது -20 தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடனான ஒப்பந்தம் முடிந்துவிட்டது. அணியில் விளையாடிய நாட்கள் மிகப்பெரிய அனுபவமாக இருந்தது என்று இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

ஹர்பஜன் சிங் சென்னை அணியில் கடந்த 3 ஆண்டுகளாக பங்கேற்றார். கடந்த ஆண்டு தனிப்பட்ட காரணங்களால் தொடரில் விளையாடவில்லை. இந்நிலையில், இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் ஹர்பஜன் சிங் விடுவிக்கப்படுவதற்கான பேச்சு எழுந்த நிலையில், ஒப்பந்தம் முடிந்துவிட்டதாக அவரே அறிவித்துள்ளார்.

ஹர்பஜன் சிங் 2 கோடி இந்திய ரூபாவுக்கு வாங்கப்பட்டார். இந்நிலையில் இந்த ஆண்டு ஹர்பஜன் சிங் விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தகவல் வெளியானது. இந்நிலையில் அவர் தனது ருவிட்டர் பதிவில், "ஐ.பி.எல். தொடரில் சி.எஸ்.கே. அணியுடனான என்னுடைய ஒப்பந்தம் முடிவுக்கு வருகிறது. சி.எஸ்.கே. அணிக்காக நான் விளையாடியது மிகப்பெரிய அனுபவமாக இருந்தது. அழகான நினைவுகள், சிறந்த நண்பர்கள் என எப்போதுமே நினைவில் வைத்திருப்பேன். 2 ஆண்டுகளாக அணியில் நீடித்தேன். சென்னை சுப்பர் கிங்ஸ் நிர்வாகிகள், ஊழியர்கள், ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி. வரும் ஐ.பி.எல். தொடரில் சிறப்பாகச் செயல்பட வாழ்த்துகள்" என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# தென்னாபிரிக்க ரி-20 அணியின் தலைவராக கிளாசென்

கேப்டவுன், ஜன. 21

தென்னாபிரிக்க இருபது -20 அணியின் தலைவராக ஹென்றிக் கிளாசென் நியமிக்கப்பட்டுள்ளார்.

2 டெஸ்ட், 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி பாகிஸ்தான் செல்கிறது.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கு எதிரான இருபது -20 அணி தெரிவானது. இந்த அணிக்கு கிளாசென் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முதன்முறையாக தென்னாபிரிக்க அணியின் தலைமை பொறுப்பு கிளாசென்னுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும் தென்னா பிரிக்க அணி, மார்ச் மாதத்தில் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.





# விலகுகிறார் அசந்த டிமெல்

கொழும்பு, ஜன. 21

இலங்கை கிரிக்கெட்டின் முகாமையாளர் பதவியிலிருந்து விலகவுள்ளார் என்று அசந்த டி மெல் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இங்கிலாந்து சுற்றுப் பயணம் நிறைவடையவுள்ள நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் அவர் தனது பதவியலிருந்து விலகவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களாலேயே தான் இவ்வாறு பதவி விலகவுள்ளார் என்றும், எனினும் இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவராக தொடர்ந்தும் செயல்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# ரஞ்சன் விடுதலையாக ஒரேவழி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு

## சஜித் அணிக்கு டிலான் அறிவுரை



கொழும்பு,ஜன.21

**பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுதலையாவதற்கு ஒரே மாற்றுவழி ஜனாதிபதியின் பொது மன்னிப்பாகும் என ஆளுங்கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

**மேலும் அதனைப் பெற்றுக்கொள்ளவே எதிர்க் கட்சி முயற்சிக்கவேண்டும் என்றும் அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ரஞ்சனுக்காக செயல்படுவதாகத் தெரிவித்துக்கொண்டு அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலும் அவர் போட்டியிடுவதைத் தடுப்பதற்கே சிலர் முயற்சிக்கின்றனர் எனவும் கூறினார்.

மேலும் ரஞ்சனுக்கு வழங்கப்பட்டிருக்கும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கான தீர்ப்பு, ஐக்கியத் தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பாகும்.

தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் தொடர்பில் ரஞ்சன் உட்பட எதிர்க்கட்சியினருக்கு நல்ல அபிப்ராயம் இருக்கின்றது என்றும் அதனால் நீதிபதிகள் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கியதாக தெரிவிக்க முடியாது.

அத்துடன் ரஞ்சனுக்கு தற்போது உயர்நீதிமன்றமே தீர்ப்பளித்து சிறைத்தண்டனை வழங்கி இருக்கின்றது. நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்துக்கு பின்னரே வெளியில் வரமுடியும்.

அவ்வாறு இல்லாவிட்டால் இருக்கும் ஒரே மாற்றுவழி ஜனாதிபதி பொது மன்னிப்பை பெற்றுக்கொள்வதாகும். அதனால் ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்றத்துக்கு அழைத்துவரவேண்டும் எனத் தெரிவிக்கும் எதிர்க்கட்சியினர், உண்மையாகவே அவருக்காக செயல்படுவதாக இருந்தால், அவருக்கு பொது மன்னிப்பை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கவேண்டும்- என்றார். (எ)

# மேய்ச்சல் தரை அபகரிப்பு மக்கள் எதிர்ப்பு போராட்டம்





மட்டக்களப்பு,ஜன.21

மட்டக்களப்பு - பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் மேய்ச்சல் தரையை பெரும்பான்மை மக்கள் அத்துமீறி அபகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் ஒன்று நேற்றுப் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கால்நடை பண்ணையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் பட்டிப்பளை பிரதேசத்திலிருந்து பேரணியாக பிரதேச செயலகம் வரை சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு- பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கச்சக்கொடி சுவாமிமலை 135 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வனவள பரிபாலன திணைக்களத்துச் சொந்தமான மணல் ஏற்றம், காத்தாடியார்சேனை, பொன்னாங்கண்ணிசேனை, பனையடி வெட்டை, மலையடி வெட்டை விச்சுகுளம் ஆகியன பிரதேச கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை பண்ணையாளர்கள் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சில வருடங்களாக பெரும்பான்மை மக்கள் அத்துமீறிய பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருவதுடன் 1500 ஏக்கருக்கு அதிகமான காடுகள் அழிக்கப்படுவதுடன் முட்கம்பிகள் பயன்படுத்தப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மேய்ச்சல் தரை அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முற்பகல் 10 மணியளவில் பட்டிப்பளை பிரதேச சபைக்கு முன்னால் ஒன்று கூடிய பண்ணையாளர்கள், அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்து அங்கிருந்து பட்டிப்பளை பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் மற்றும் பட்டிப்பளை பிரதேச சபைத் தவிசாளர், போரதீவுப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (எ)

# மினுவாங்கொடை - பேலியகொடை தொற்றாளர் 50 ஆயிரத்தை கடந்தது

கொழும்பு,ஜன.21

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 669 புதிய கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 660 பேர் மினுவாங்கொடை - பேலியகொடை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து மினுவாங்கொடை - பேலியகொடை கொரோனா கொத்தணிப் பரவலில் இனங்காணப்பட்ட மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 50 ஆயிரத்து 561 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் பதிவாகியுள்ள மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 54 ஆயிரத்து 500ஐ தாண்டியுள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றுக்குள்ளாகி குணமடைந்தோரின் எண்ணிக்கையும் 46 ஆயிரத்து 594 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் மேலும் மூன்று பேர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 270ஐ தாண்டியுள்ளது. (எ)



## பியல் நிஷாந்தவுடன் தொடர்புடைய 22 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஜன.21

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, அவரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் கொக்கல பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சரின் இரண்டு மகன்கள், சாரதி, பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் செயலாளருக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைச்சருடன் நெருங்கிப் பழகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேருக்கு சுயதனிமைப்படுத்திக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட உடனடி அன்ரிஜென் பரிசோதனையில் இராஜாங்க அமைச்சருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவின் சாரதிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக என கேகாலை பொது வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ)

# வர்த்தமானி அறிவிப்புக்கள் அனைத்தும் பயனற்றவை

## அநுரகுமார சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜன.21

பொருள்களுக்கான விலை குறித்து வெளியாகும் வர்த்தமானி அறிவிப்புக்கள் அனைத்தும் பயனற்றவை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சீனி, தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பல பொருள்களின் மீதான இறக்குமதி வரி திருத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கள் தொடர்பில் நேற்றுப் புதன்கிழமை சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: வர்த்தமானிகள் வெளியிடப்படுகின்றதே தவிர அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

மேலும் சீனி இறக்குமதி மீதான வரி தளர்த்தப்படுவதால் ஜனவரி 10 ஆம் திகதி வரை 10 பில்லியன் ரூபா இழப்பு பதிவாகியுள்ள நிலையில் ஏன் சீனி மீதான வரி குறைக்கப்பட்டது என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை, இறக்குமதி தடை செய்யப்பட்டிருப்பதால் சுழிப்பறைகள் அல்லது வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்- என்றார். (எ)



## குருந்தூர்மலைக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது

**முன்னாள் எம்.பி. சிவமோகன்**

முல்லைத்தீவு, ஜன. 21

குருந்தூர் மலைக்கு சென்று பார்வையிட தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிப்படை தன்மை எதுவும் இல்லாமல் தொல்பொருள் ஆய்வு நடத்தப்படு கின்றது. இது தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்டமாகவே குருந் தூர் மலை விடயத்தை பார்ப்பதாக வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

இலங்கை தொல்லியல் திணைக்களத்தால் ஆக் கிரமிக்கப்பட்டுள்ள குமுழமுனையில் அமைந்துள்ள தமிழர் வழிபாட்டுப் பிரதேசமான குருந்தூர் மலைக்கு நேற்று சென்றபோதே இந்தக் கருத்தை அவர் வெளி யிட்டார்.

இதுவொரு தமிழர் பிரதேசம். இங்கு எமது மக்களால் ஐயனார் ஆலயம் பராமரிக்கப்பட்டது டன் வழிபட்டும் வந்தனர். இனரீதியாக தமிழர்க ளுக்கு எதிராக உயர்மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர் மானம் ஒனறுக்கு அமைய பொய் கூறி, ஆராய்ச்சி என்ற போர்வையில் தொல்லியல் திணைக்களம் இங்கு வந்துள்ளது. தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப் பின் ஆரம்பகட்டமாக இதனைப் பார்க்க முடிகிறது.

இதன் மூலம் முல்லைத்தீவில் பெரும் ஆக்கிர மிப்பு இடம்பெறுகின்றது. இந்த ஆக்கிரமிப்பில் இருந்து நாம் எப்படி பாதுகாப்பாக இருக்கப் போகி றோம் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

இந்த மலையில் ஏறி என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிப் படைத்தன்மையாக தொல்பொருள் ஆராய்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை என்பதற்கு இது ஓர் ஆதா ரம் - என்றார்.

## 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்:

# சிறப்பு நீதிமன்றின் விசாரணை பெப். 19 மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 21

**கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத் திச் சென்று கப்பம் பெறப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில், பிரதிவாதிகளான முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட உள்ளிட்ட 14 கடற்படையினருக்குஎதிரான வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க சிறப்பு ட்ர யல் அட்பார் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்று உத்தரவிட்டனர்.**

கொரோனா தொற்று அச்சம் கார ணமாக கடந்த நாட்களில் குறித்த வழக்கு விசாரணை தடைப்பட்டி ருந்தது. இந்நிலையிலேயே, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அந்த வழக்கை விசாரணைக்கு எடுக்கவும், அது தொடர்பில் பிரதிவாதிகள் உட் பட அனைத்துத் தரப்பினருக்கும் அறிவிக்கவும் நீதிமன்ற பதிவாளருக்கு நீதிபதிகள் குழாம் உத்தரவு பிறப் பித்தது.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வத்தளை மற்றும் கட் டுநாயக்கா உள்ளிட்ட பல பிரதே சங்களில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு இந்த கடத்தல்கள் அரங் கேற்றப்பட்டன. குறிப்பாக தெஹி வளையில் 2008.09.17 அன்று பெர் னாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரின் வீட்டில் வைத்து அவரும், ரஜீவ நாக நாதன், பிரதீப் விஸ்வநாதன், திலு கேஸ்வரன் ராமலிங்கம், மொஹம மட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்கள் கடத்தப் பட்டனர்.

தவிர, கொட்டாஞ்சேனை சேர்ந்த கஸ்தூரி ஆராச்சிலாகே, ஜோன் ரீட், அமலன் லியோன் மற் றும் ரொஷான் லியோன், கொட்டாஞ் சேனையை சேர்ந்த அன்ரனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையை சேர்ந்த தியாகராஜா ஜெகன் உள் ளிட்டோரும் இவ்வாறு கடத்தப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## மன்னார், கொழும்பில் கஞ்சாவுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன. 21

மன்னாரிலும், கொழும்பிலும் 21 கிலோ 650 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, மன்னார் - பேசாலை பகுதியில் கஞ்சாப் போதைப் பொருளை கடத்தி சென்ற குற்றச்சாட்டில் 26 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பயணித்த வானிலிருந்து 20 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, கொழும்பு ஹோமாகம நகரப் பகுதியில் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், ஒரு கிலோ 650 கிராம் கஞ்சா வுடன் 26 வயது சந்தேகநபர் கைது செய்யப்பட் டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## திருகோணமலையில் நேற்று வியாபாரிகள் போராட்டம்

திருகோணமலை, ஜன. 21

திருகோணமலை - கண்டி வீதியின் மட்டிக்களி பகுதியில் வீதியோர மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபரிகள், நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். தமது உடமைகளை நகர சபையினர் கைய கப்படுத்தி, அப்பகுதியில் வியாபார நடவடிக்கை யில் ஈடுபட வேண்டாமென தெரிவிப்பதால், தாம் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் கள் தெரிவித்தனர்.

கொரோனா தாக்கம் காரணமாக பொதுச் சந் தைகள் அனைத்தும் மூடப்பட்டன. இதனால், வீதியோரங்களில் வியாபாரம் செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டது. இவர்களில் பலர் வீதி யோர வியாபார நடவடிக்கைகளை இன்றுவரை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த வியாபாரி களிடம் இருந்து நாள் ஒன்றுக்கு 100 ரூபா மற்றும் 150 ரூபா பணம் நகர சபையால் வசூலிக்கப்பட்டு, அவர்களுக்கு பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டன.

இந்நிலையில், திடீரென்று நகர சபையால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி நடவடிக்கையின் காரணமாக தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மீன் வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ)





யாழ். பல்கலையில் முள்ளிவாய்க்கால்

## நினைவுத்தூபி அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு அத்திபாரம் வெட்டும் பணி நேற்று மாணவர்கள் முன் னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய் கால் நினைவுத் தூபி கடந்த 8 ஆம் திகதி இரவு பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இடித்து அழிக் கப்பட்டது.

இதற்கு உலகம் முழுவதிலி ருந்தும் பெரும் எதிர்ப்பு வெளி யிடப்பட்டது. மாணவர்கள் சிலர் உணவு தவிர்ப்பு போராட் டத்திலும் ஈடுபட்டனர்.

பெரும் எதிர்ப்புகளால் துணை வேந்தர் சி. சிறிசற்குணராசா நினைவுத் தூபியை மீளவும் அமைப்பதற்கு சம்மதித்தார். அத்துடன், அடிக்கலும் நாட்டி வைத்தார்.

இதைத் தொடர்ந்து முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபியை அமைக்க நிதி உதவி தருமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் கள் ஒன்றியம் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதைத் தொடர்ந்து, நேற்றைய தினம் தூபி அமைப் பதற்கான வேலைகள் ஆரம்பிக் கப்பட்டன. (ஐ-3)




**காலை**

5.15 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி - தரம் 07 - தமிழ்
6.45 மணி - தரம் 08 - தமிழ்
7.30 மணி - தரம் 09 - கணிதம்
8.15 மணி - தரம் 10 - கணிதம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 07 - தமிழ்
2.00 மணி - தரம் 08 - தமிழ்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்
7.00 மணி - க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

# ராஜபக்ஷ பரம்பரை அதிகாரத்தை துறக்கத் தயார் நிலையில் இல்லை!

**சம்பிக்க எம்.பி. குற்றச்சாட்டு**

கொழும்பு, ஜன. 21

நாட்டில் கடந்த 70 வருடகாலத் தில் இடம்பெற்ற அனைத்து நன்மை, தீமைகளுக்கும் சேனாநாயக்க - கொத்த லாவல பரம்பரை, பண்டாரநாயக்க - ரத்வத்த பரம்பரை, ஜெயவர்தன - விக்கிரமசிங்க பரம்பரை மற்றும் 2005 ஆம் ஆண்டின் பின்னர் ராஜபக்ஷ பரம்பரை ஆகிய நான்குமே பொறுப் பேற்க வேண்டும்.

இவற்றில், ராஜபக்ஷ குடும்பம் அதிகாரத்தைத் துறப்பதற்குத் தயார் நிலையில் இல்லை என்பதுடன் சமு தாயத்தின் அனைத்துக் கட்டமைப் புக்களையும் ஆள்வதற்கு முற்படு கின்றது என்று முன்னாள் அமைச் சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 'எமது எதிர்கால சந்ததியினர் மத்தியில் பாரிய சமுதாய மாற்ற மொன்றை ஏற்படுத்துவதற்கு நாம் முன்னின்று செயற்பட வேண்டும். தற்போது நாட்டை ஆட்சிசெய்கின்ற, எதிர்காலத்தில் ஆட்சி செய்வதற்கு எதிர்பார்த்திருக்கும் குடும்பத்திற்கு அந்த இயலுமை இல்லை என்பது அவர்களது கடந்தகால செயற்பாடுக ளின் மூலம் உறுதியாகியிருக்கிறது.

தற்போது நாடு முகங்கொடுத் திருக்கும் நெருக்கடி நிலைக்கு கடந்த 70 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்தவர்களே பொறுப்புக்கூற வேண்டும் என பரவலாகக் கூறப் படுகின்றது. எமது நாடு இலவசக் கல்வி, இலவச சுகாதாரசேவை ஆகியவற்றில் சிறந்த இடத்தில் இருந்தாலும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அது சிறந்த இடத்தை அடையவில்லை என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாட்டைத் தவறாக வழிநடத்தாதீர்கள்

## சபையில் எதிர்க்கட்சியிடம் மஹிந்தானந்த சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன.21

தவறான கருத்துக் களை சமூகத்தில் பரப்பி நாட்டை தவறாக வழிநடத்த வேண்டாம் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்க மகே கேட்டுக்கொண் டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கறுப்புப் பட்டி அணியும் எதிர்க்கட்சியினர் அரசியல் யாப்பிற் குட்பட்ட பாராளுமன்றத்தில் இருப்பது கவலைக்குரிய நிலையாகும்.

நீதிபதிகள் மோசடிக்காரர்கள் என்று கூறிய ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஆதரவாக எதிர்க்கட்சி குரல் கொடுத்து வருகின்றமை கவலைக்குரியதாகும்.

கொரோனா நிவாரணங்களை வழங்க 60 இற்கும் அதிகமான வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட் டுள்ளன. இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் எந்த வொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை-என்றார். (அ-எ)

## கொரோனா தொற்று நோயால்

# மன்னாரில் இறந்தவரின் ஜனாஸா வவுனியாவில் இன்று தகனமாகிறது

மன்னார், ஜன. 21

**மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றால் உயிரிழந் தவரின் சடலத்தை அரச செலவில் வவுனியா நகர சபையால் பராமரிக் கப்படும் மின் தகன மயானத்தில் தகனம் செய்யப் பணிக்கப்பட்டுள்ளது.**

இஸ்லாமியரான அவரின் ஜனாஸாவை சமய முறைப்படி அடக்கம் செய்ய அனுமதி இல்லாததால் அதனைப் பொறுப்பேற்க உறவினர்கள் மறுத்துள்ளனர் என்று வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டது.

அதனால் அவரது ஜனாஸாவை இன்று வியாழக்கிழமை வவுனியா நகர சபையால் பராமரிக்கப்படும் மின் தகன மயானத்தில் தகனம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் முதல் மரணம் நேற்று பதிவானது. மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த 61 வயதுடைய இஸ்லாமியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இருதய நோயாளியான அவர் மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்தார்.

அவரது மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்திய நிலையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றிரவு உறுதிப்படுத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# 54,798 ஆக எகிறியது கொரோனா தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக் கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்து 798 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றும் 379 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மொத்தத் தொற்றாளர்களில் 50 ஆயிரத்து 940 பேருக் குக் கொரோனாவின் மூன்றாவது அலையின்போது வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 47 ஆயிரத்து 215 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 7 ஆயிரத்து 309 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

# மக்களுக்கு இராணுவ பயிற்சி: நடைமுறை சாத்தியம் இல்லை

கொழும்பு, ஜன. 21

18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை நடைமுறையில் செயல்படுத்த முடியாது என்று முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

18 முதல் 26 வயதுக்குட்பட்டவர்களுக்கு பயிற்சி யளிக்க பெருந்தொகை பணம் தேவைப்படும். ஒருவருக்கு 6 மாதங்கள் பயிற்சியளிக்க 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவாகும். ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு ஆறு மாத பயிற்சி அளிப்பதற்காக, அரசுக்கு 750 கோடி ரூபா தேவைப்படும்.

இந்தத் திட்டம் தற்போது தங்கள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள போராடும் இளைஞர்களுக்கு ஊக்கம ளிக்கும் என்றாலும், நிதி பற்றாக்குறை காரணமாக அது செயல்படாது மற்றும் தளபாட சிக்கல்கள் உள்ளன. அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்று வதிலும், பொதுமக்களுக்கு சேவை செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# யாழின் முக்கிய தீவுகளில் மின்சார மேம்பாட்டு திட்டம் சீனாவிடம்!

யாழ்ப்பாணம், ஜன. 21

நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய பகுதி களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பை உருவாக் குவதற்கு சீனாவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இந்தத் திட்டத்தை இலங்கை மின்சார சபை நடை முறைப்படுத்துகிறது. மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்பாடு திட்டத்தின் ஒரு பகுதியாகவே புதுப்பிக்கத் தக்க எரிசக்தி அமைப்பை உருவாக்க சீனாவுக்கு அமைச் சரவை அனுமதி வழங்கியுள்ளது. நேற்றுமுன்தினம் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

சீனாவின் கூட்டுமுயற்சி நிறுவனமான சைனோசோர் எச்வின் நிறுவனம் இந்தத் திட்டத்தை முன்னெடுப்ப தற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. (ஐ)

## நெடுந்தீவு கடலில் கவிழ்ந்தது படகு

# இரு இந்திய மீனவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 21

இலங்கை கடல் எல்லைக் குள் அத்துமீறி நுழைந்து நெடுந்தீவு கடலில் மீன்பிடித்த இந்திய மீனவர்களின் படகு விபத்துக்குள்ளானது. இதில் உயிரிழந்த இரு இந்திய மீனவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் குறித்து காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு கடற்படையி னரால் அறிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை கடற் பரப்பில் மீட்கப்பட்ட அந்த இரு சடலங்களும் காணாமல் போன இந்திய மீனவர்களினு டையது என்று நம்பப்படு கின்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது:

'கடந்த திங்கட்கிழமை பின்னிரவு நெடுந்தீவிலிருந்து சுமார் 8 கடல் மைல் தொலை வில் இந்த விபத்து இடம் பெற்றது. இந்தியாவிலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிக்க சுமார் 50 படகுகள் வந்திருந்தன.

இவ்வாறு அத்துமீறியவர் களை கைது செய்ய நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட் டன. கடற்படையிடம் இருந்து தப்பிக்கும் நோக்கு டன், இந்திய மீனவர்கள் தமது படகுகளை செலுத்த முயற்சித்தனர்.

இவ்வாறு தப்பிச் செல்ல முயன்றபோது தமது படகு களை தாமே சேதப்படுத்தி தப்பிச்செல்ல முயன்றபோதே அந்தப் படகு கவிழ்ந்ததாக கடற்படை தரப்பு தெரிவித் தது.

கடற்படையின் சுழியோ டிகள் குழு, கடற்படை படகு கள் மற்றும் கப்பல்கள் இணைந்து படகில் இருந்த மீனவர்களை தேடும் நட வடிக்கைகளை முன்னெடுத் தனர். இந்த சம்பவத்தில் கடற்படையின் படகு ஒன் றுக்கு சேதம் ஏற்பட்டது. குறித்த படகு காங்கேசன் துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது" என்று இலங்கை கடற்படை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இந்திய மீன வர்கள் இருவரது சடலங்கள் காங்கேசன்துறை கடற்பரப் பில் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ - 3)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15580 \| வே \|1986<br>புங்குடுதீவு \| இந்து<br>Proprietor\|Singapore<br>பூரட்டாதி(கும்பம்)\|182செ.மீ | 15434\| வே \|1993<br>நல்லூர்\| இந்து\|<br>Software Engineer\|Sri lanka\|<br>உத்திரட்டாதி(மீனம்) \|164செ.மீ |
| 15074\|கோ \|1986<br>சுன்னாக நகரம்\|இந்து\|செவ் : 07<br>Director \|Sri Lanka \|<br>மிருகசீரிடம் (ரிஷபம்)\|156செ.மீ | 15335 \| வே \|1993<br>யாழ்நகரம்\| இந்து \|<br>Work Flow Coordinator<br>Sri Lanka \|கார்த்திகை(ரிஷபம்)\|<br>163செ.மீ |
| 15098\| கோ\|1986<br>கைதடி \| இந்து \| லக்.செவ்<br>Field Program Manager \|<br>Sri lanka \|ஆயில்லியம்(கடகம்)<br>168செ.மீ | 15670\| வே \|1993<br>Divorced\| புத்தூர்\| இந்து<br>Sri lanka\|கேட்டை(விருச்சிகம்)<br>செவ் : 12\| 150செ.மீ |
| 15176\|வே \|1987<br>கொட்டடி \| இந்து \|<br>Accountant\|Sri lanka<br>அஸ்வினி(மேடம்) \| 178செ.மீ | 15128\| வே \|1993<br>யாழ்நகரம்\|இந்து \| Sri Lanka\|<br>Manager \| உத்தராடம்(மகரம்)\|<br>சூ.செவ் : 12\| 167செ.மீ |
| 15167\| வே \|1987<br>புங்குடுதீவு\| இந்து \|<br>Self Employee\| France\|<br>பூரட்டாதி (மீனம்) \|162செ.மீ | 15673 \| வே \|1994<br>புத்தூர் \| இந்து \|சூ.செவ் : 07\|<br>Public Relation Officer\|USA\|<br>அத்தம் (கன்னி) \|158செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் - யாழ் கல்வி வலயம்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



**பகல்**
1.00 மணி : நலம்தானா ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-நேரலை



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : வேர்களும் விருட்சங்களும்
10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி TV CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

**ஓம் டிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் ஏழாலை வசந்தபுரம்
வசந்த நாகபூஷணி அம்மன் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கைதடி வாலாம்பிகை
அம்மன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு இறுபிட்டி
அரியநாயகன்புலம் அருள்மிகு
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.